ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ செப்டம்பர். 13, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 341 ❖ ரூ.10

ஜி20 மாநாட்டுக்கு பட்ஜெட் ஒதுக்கீடு ரூ.990 கோடி, செலவு ரூ.4,100 கோடி

# சர்ச்சை

## ஆகஸ்ட் மாதத்தில் நாட்டில் சராசரியாக ஒரு தட்டு உணவின் விலை மதிப்பு 24 சதவீதமும், வேலைவாய்ப்பின்மை 8 சதவீதமும் அதிகரித்துள்ளது ; காங்கிரஸ் சரமாரி குற்றச்சாட்டு

**புதுடெல்லி, செப். 13–**

**அண்மையில் நடந்து முடிந்த ஜி20 மாநாட்டுக்கான பட்ஜெட், நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட பல மடங்கு அதிகரித்துள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ள காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மாநாடு முடிவுற்றதால் பிரதமர் மோடி இனியாவது தேசத்தின் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.**



ஆகஸ்ட் மாதத்தில் நாட்டில் சராசரியாக ஒரு தட்டு உணவின் விலை மதிப்பு 24 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும், வேலைவாய்ப்பின்மை 8 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ள கார்கே, நாட்டில் பணவீக்கம், வேலைவாய்ப்பின்மை, மணிப்பூர் கலவரம் என கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் நிறைய உள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பாக எக்ஸ் (ட்விட்டர்) தளத்தில் விரிவாக எழுதியுள்ள அவர், "2024 மக்களவைத் தேர்தலில் பாஜகவுக்கு விடைகொடுக்க மக்கள் ஆயத்தமாகிவிட்டனர். மோடி உண்மையை மறைக்கப் பார்க்கிறார். ஆனால், பொதுமக்களோ உண்மையை மட்டுமே கேட்க விரும்புகின்றனர். திசை திருப்பும் பிரச்சினைகளை அவர்கள் விரும்பவில்லை.

மோடி அரசின் மோசமான நிர்வாகத்தால் ஊழல் மலிந்துள்ளது. கணக்கு தணிக்கைத்துறை மத்திய அரசின் ஜல் ஜீவன் திட்டத்தில் ரூ.13,000 கோடி இழப்பு உள்பட பல்வேறு ஊழல்களை தனது அறிக்கையில் அம்பலப்படுத்தியுள்ளது. ஜம்மு காஷ்மீரில் பட்டியலின் அதிகாரி ஒருவர் ஜல் ஜீவன் ஊழலை வெளிச்சத்துக் கொண்டு வந்ததற்காகவே துன்புறுத்தப் பட்டிருக்கிறார்.

ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் வைரல் ஆச்சார்யா, வங்கியின் கருவூலத்தில் இருந்து ரூ.3 லட்சம் கோடியை மாற்றக் கொடுக்கப்பட்ட அழுத்தத்தை அவர் எவ்வாறு எதிர்த்தார் என்பதை அம்பலப்படுத்தியுள்ளார். மணிப்பூரில் மீண்டும் வன்முறை வெடித்துள்ளது, இமாச்சலப்பிரதேசத்தில் இதுவரை கண்டிராது இயற்கைப் பேரிடரை மழை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், அதை மோடி தேசிய பேரிடராக அறிவிக்கவில்லை. மனிதனால் உருவாகும் வன்முறைகள், இயற்கைப் பேரிடர்கள் என எல்லாவற்றையும் காணாதவராக பிரதமர் மோடி இருக்கிறார்" என்று கார்கே சாடியுள்ளார்.

அதே போல் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபாலும் தனது கருத்தை எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார். குறிப்பாக ஜி20 மாநாட்டுச் செலவை முன்வைத்து அவர் கேள்விகளை எழுப்பியுள்ளார். அதில் அவர், "ஜி20 உச்சி மாநாட்டுக்கு ஒதுக்கப்பட்டது வெறும் 990 கோடி ரூபாய். ஆனால் பாஜக அரசு அந்த மாநாட்டுக்காக ரூ.4,100 கோடி செலவிட்டுள்ளது. கரோனா பெருந்தொற்றுக்குப் பின்னர் உலக நாடுகளின் அரசுகள் பொது நிகழ்வுகளுக்கான செலவினங்களைக் குறைத்து வருகிறது. இந்தோனேசியா இதே ஜி20 மாநாட்டை நடத்த இந்தியாவுடன் ஒப்பிடும்போது வெறும் 10 சதவீதம்தான் செலவழித்தது. பாலி உச்சி மாநாட்டுக்கு இந்தோனேசிய அரசானது இந்திய மதிப்பில் ரூ.364 கோடிதான் செலவழித்தது.

அரசாங்கத்தால் உள்நாட்டில் சலுகை விலையில் எரிபொருள் தர இயலவில்லை; விவசாயிகளுக்கு பயிர்களுக்கான இழப்பீட்டுத்தொகையைத் தர முடியவில்லை. ஆனால் மாநாட்டுக்கு இவ்வளவு தொகை செலவழிக்கிறது. நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதார சிக்கலை மறைக்க பாஜக அரசு எத்தனை பூச்சு முயற்சிகளை மேற்கொண்டாலும் முடியாது. பல கோடி ரூபாய் இரைத்துக் கட்டப்பட்ட பாரத் மண்டபத்தில் வெள்ள நீர் புகுந்தது என்று பதிவிட்டுள்ளார்.

இதற்கிடையில், ஜி20 மாநாட்டுக்காக செலவழிக்கப்பட்ட ரூ.4100 கோடியில் புது டெல்லி மாநகராட்சி கவுன்சில் (NDMC)-க்கு ரூ.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. டெல்லி வளர்ச்சிக் குழுமத்துக்கு ரூ.18 கோடி, சாலைப் போக்குவரத்து அமைச்சகத்துக்கு ரூ.26 கோடி, பொதுப் பணித்துறைக்கு ரூ.45 கோடி, எம்சிடி - முனிசிபல் கார்ப்பரேஷன் ஆஃப் டெல்லிக்கு ரூ.5 கோடி, வெளியுறவு அமைச்சகத்துக்கு ரூ.0.75 கோடி, வனத்துறைக்கு ரூ.16 கோடி, டெல்லி காவல்துறைக்கு ரூ.340 கோடி, இந்திய வர்த்தக ஊக்குவிப்பு அமைப்பு (ITPO)-க்கு ரூ.3600 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவற்றில் இந்திய வர்த்தக ஊக்குவிப்பு அமைப்புக்கு மட்டும் ஒதுக்கப்பட்ட தொகையானது ஜி20 உச்சி மாநாட்டுக்கு என்று மொத்தமாக ஒதுக்கப்பட்ட ரூ.900 கோடியைவிட 4 மடங்கு அதிகமாகும். இந்நிலையில்தான் ஜி20 உச்சி மாநாட்டு பட்ஜெட் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், இந்தியாவின் நம்பர் 1 செஸ் வீர்ர் டி.குகேஷ் சந்தித்து வாழ்த்துப்பெற்றர். அப்போது முதலமைச்சர் குகேஷூக்கு நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, வேலம்மாள் கல்வி அறக்கட்டளையின் தாளாளர் எம்.வி.எம். வேல்மோகன் மற்றும் செல்வன் குகேஷ் பெற்றோர் ஆகியோர் உள்ளனர்.

## தமிழகத்துக்கு தண்ணீர் தரும் நிலையில் கர்நாடகா இல்லை நீர்வளத் துறை அமைச்சர் டி.கே.சிவகுமார்

**பெங்களூரு , செப். 13–**

தமிழகத்துக்கு காவிரி நீர் தரும் நிலையில் கர்நாடகா இல்லை என்று அம்மாநில துணை முதல்வரும், நீர்வளத் துறை அமைச்சருமான டி.கே.சிவகுமார் தெரிவித்துள்ளார். பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,




"செவ்வாய்கிழமை நடைபெறும் காவிரி நீர் மேலாண்மை ஆணைய கூட்டத்தில் பங்கேற்க கர்நாடக அதிகாரிகள் சென்றுள்ளனர். காவிரி நீர்பிடிப்புப் பகுதியில் மழை இல்லாததால் கர்நாடகாவில் தற்போது தண்ணீர் இல்லை. இந்த உண்மையை காவிரி நீர் மேலாண்மை ஆணையத்துக்கு அவர்கள் உணர்த்துவார்கள். தண்ணீர் இல்லாததால் கர்நாடகாவில் குடிநீர் வழங்குவதுகூட சிரமமாக உள்ளது என்பதை தெரிவிப்பார்கள். தயவு செய்து குடிநீரை சேமிக்கவாவது அனுமதியுங்கள் என்று காவிரி நீர் மேலாண்மை ஆணைய அதிகாரிகளுக்கு அவர்கள் வேண்டுகோள் விடுப்பார்கள். தற்போது தமிழ்நாட்டுக்கு காவிரி நீர் செல்லவில்லை. காரணம் மழை இல்லை. மழை பொழிய எல்லோரும் கடவுளிடம் வேண்டுவோம்" என்று தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் 29-ம் தேதியில் இருந்து தமிழகத்துக்கு நாள்தோறும் 5 ஆயிரம் கன அடி வீதம் 15 நாட்களுக்கு காவிரியில் இருந்து நீர் திறக்க வேண்டும் என்று கர்நாடகாவுக்கு காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டிருந்தது. இதையடுத்து, தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்து விட்ட கர்நாடகா தற்போது அதனை நிறுத்தி உள்ளது.

முன்னதாக, இந்த விவகாரம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடக முதல்வர் சித்தராமையா, "தமிழகத்துக்கு 177 டிஎம்சி தண்ணீர் ஒதுக்கப்பட்டுள்ளது. சாதாரண ஆண்டுகளில் அந்த அளவுக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும். இக்கட்டான நேரத்தில், பேரிடர் ஃபார்முலாவைப் பின்பற்ற வேண்டும். ஆனால் தமிழகம் தேவையில்லாமல் சிக்கலை உருவாக்குகிறது. பாஜக கூறுவது போல, கர்நாடக அரசு மகிழ்ச்சியுடன் தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கவில்லை.

காவிரிநீர்மேலாண்மை ஆணையத்தின் உத்தரவின் காரணமாகவே தண்ணீரை திறக்கிறது. மாநில விவசாயிகளின் நலன் மற்றும் மைசூரு, பெங்களூரு மற்றும் பல மாவட்டங்களின் குடிநீர்த் தேவைகளைப் பாதுகாப்பது அரசின் கடமை. அதற்காகவும்தான் தண்ணீரை திறக்கிறோம். மாநில அரசைப் பொறுத்தவரை, நீர் கொள்கையில், குடிநீருக்கு முதல் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அதேநேரம், பயிர்களைப் பாதுகாக்க தண்ணீர் திறக்க வேண்டும் என காவிரி ஆணையம் கூறியதால் கர்நாடக அரசு அதை செய்தது.

திமுக அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகியும் எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. செப்டம்பர் 21-ம் தேதி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வரவிருக்கிறது. அப்போது அரசு உண்மை நிலையை எடுத்துரைக்கும். முன்னதாக, இன்று (செப்டம்பர் 12) நடக்கும் காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்திலும் அரசு தனது நிலைப்பாட்டை முன்வைக்கும். எனது அரசாங்கம் இந்த விவகாரத்தில் அரசியலுக்கு விலைபோகாது. மேலும், மாநில விவசாயிகளின் நலனில் சமரசம் செய்யாது. ஆகஸ்ட் இறுதி வரை தமிழகத்துக்கு 86 டிஎம்சி தண்ணீர் விட வேண்டும். ஆனால் அதில் பாதிகூட நாங்கள் விடுவிக்கவில்லை" என தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதுக்கோட்டையில் டிட்டோ– ஜேக் அமைப்பின் சார்பில் 6 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

**புதுக்கோட்டை, செப். 13–**

புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலக வளாகத்தில் டிட்டோ- ஜேக் அமைப்பின் சார்பில் 6 அம்சக் கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




புதுக்கோட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலக வளாகத்தில் தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கை குழு டிட்டோ- ஜேக் புதுக்கோட்டை மாவட்டத்தின் சார்பில் 6 அம்ச கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வலியுறுத்தி பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆசிரியர் மன்ற மாவட்ட செயலாளர் ஜோதிமணி தலைமையில் டிட்டோஜாக் உயர்மட்ட குழு உறுப்பினர் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் தொடங்கி வைத்து பேருரை ஆற்றினார். சங்கத்தின் நிர்வாகிகள் ஜீவன் ராஜ், செபஸ்தியான், பிரபாகரன், மனோகரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பள்ளிக்கல்வி இயக்குனர் மற்றும் தொடக்க கல்வி இயக்குனர் ஆகிருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு மாறாக பிஎட் பயிற்சி பெற்ற மாணவர்களை பள்ளிகளுக்கு ஆய்வுக்கு அனுப்புவதை கைவிட வேண்டும் ஆசிரியர்களுக்கு தேவையற்ற பணிச்சுமைகளை ஏற்படுத்துவதோடு மாணவர்களின் கல்வித் திறனை முற்றிலும் பாதிக்கும் என்னும் எழுத்தும் திட்டத்தை கைவிட வேண்டும். ஆசிரியர்கள் தொடர்ந்து கற்பித்தல் பணியில் ஈடுபட இயலாத வகையில் கடும் மன உளைச்சலை ஏற்படுத்தும் EMIS பதிவேற்றம் செய்யும் பணிகளில் இருந்து ஆசிரியர்களை முழுமையாக விடுவித்திட வேண்டும்.

உள்ளிட்ட ஆறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகிகள் பல தற்போது இருக்கும் சூழ்நிலையில் பாராளுமன்ற தேர்தல் வரைய இருக்கும் சூழ்நிலையில் ஆசிரியர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுவது முக்கியமான ஒன்றாகும் எனவே ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கையை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் ஏனென்றால் மதத்தை வைத்து அரசியல் செல்லும் பாஜகவின் ஆட்சியை மீண்டும் ஒழித்திட தமிழக அரசு ஆசிரியரின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்க நிர்வாகிகள் பலர் பேசினர்.

## தவறான பேட்டிகளைக் கொடுத்து திமுக அரசைக் கொச்சைப்படுத்த வேண்டாம் தமிழிசைக்கு ஆர்.எஸ்.பாரதி கோரிக்கை

**சென்னை , செப். 13–**

"தமிழகத்துக்கு வரும்போதெல்லாம் ஆளுநர் தமிழிசை ஏதாவது ஒரு பேட்டி கொடுக்க வேண்டும் என்பதற்காக, தன் அரசியல் நிலைப்பாட்டைத் தமிழகத்தில் தக்க வைத்து, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஆசையை டெல்லி மேலிடத்துக்கு வெளிப்படுத்தும் விதமாக, தவறான பேட்டிகளைக் கொடுத்து, திமுக அரசைக் கொச்சைப்படுத்த வேண்டாம்" என்று திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "பிரதமர் நரேந்திர மோடி மீது தெலங்கானா மாநில ஆளுநர் தமிழிசை சவுந்திரராஜனுக்கு என்ன கோபம் என்று தெரியவில்லை !? தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை வம்புக்கு இழுத்து, “பாரதியாருக்கு மரியாதை செலுத்தத் தமிழக முதல்வருக்கு நேரமில்லையா” என்று கேட்டிருக்கிறார்.

அத்தோடு நிற்கவில்லை அவர். “அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன் கைகுலுக்கத் தெரிந்த தமிழக முதல்வருக்கு” என்று கூறியிருக்கிறார். தமிழக முதல்வர் கைகுலுக்கிய இடம், ஒன்றியத்தில் ஆட்சியில் இருக்கும் பாஜகவும், அந்த ஆட்சியின் பிரதமராக இருக்கும் நரேந்திர மோடியும், ஏன், ஒன்றிய அமைச்சர்களும், “சாதனை” என்று பக்கத்துக்குப் பக்கம் - தொலைக்காட்சிக்குத் தொலைக்காட்சி விளம்பரம், பேட்டிகள் வாயிலாகப் பெருமைப்படுத்திக் கொண்ட ஜி-20 மாநாட்டு நிகழ்ச்சியில்தான்.

தமிழிசை ஆளுநர் என்ற முறையில் தன்னை அழைக்காமல் பிரதமர் விட்டுவிட்டாரே என கோபமா? அல்லது ஜி-20 மாநாட்டுக்கு இப்படியொரு விளம்பரத்தைச் செய்தது வருத்தமா? பாரதியாரையும் வம்புக்கு இழுத்து, தமிழகத்தின் முதல்வரையும் வசைபாடியிருக்கிறார். பாரதியாருக்குப் பெருமை சேர்த்தவர் மறைந்த முதல்வர் கருணாநிதி. அவர் வழியில் நின்று, பாரதியாரைப் பெருமைப்படுத்தும் பல்வேறு பணிகளைத் தமிழக முதல்வர், மு.க.ஸ்டாலின் செய்து வருகிறார்.





பாரதியின் நினைவுநாள், “மகாகவி நாள்"; பாரதி இளங்கவிஞர் விருது வழங்கப்படும் என்று அறிவிப்பு; வாரணாசியில் அவர் வாழ்ந்த வீடு 18 லட்சம் ரூபாய் செலவில் புனரமைப்பு; அதில் மகாகவி பாரதியாரின் மார்பளவு சிலை வைப்பு; சிறு நூலகம், வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் புகைப்படங்கள்; வரலாற்றுப் படைப்புகள் வைப்பு” என எல்லாவற்றையும் நிறைவேற்றி, மகாகவி பாரதியாரின் நினைவு நூற்றாண்டைச் சிறப்பாகக் கொண்டாடி, அதற்குச் சிறப்பு நூற்றாண்டு மலர் வெளியிட்டதும் தமிழக முதல்வர்தான் என்பதை தமிழிசைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆனால் இவை எதுவுமே தெரியாதது போல், ஒருவேளை அண்டை மாநில ஆளுநராகச் சென்று விட்டதால், தமிழக அரசியல் விவரங்களுடன் தொடர்பு விட்டுப் போனவர் போல் சகோதரி பேசியிருப்பது வேதனைக்குரியது.

அவர் குறிப்பிட்ட பாரதியாரின் நினைவு நாளன்று, தமிழக அரசின் சார்பில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மரியாதை செலுத்தியிருக்கிறார்கள். அவரது பிறந்தநாளன்று முதல்வரே மரியாதை செலுத்தி, நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார்.

ஆகவே தெலங்கானா மாநில ஆளுநராக இருக்கும் தமிழிசை, தமிழகத்துக்கு வரும்போதெல்லாம் ஏதாவது ஒரு பேட்டி கொடுக்க வேண்டும் என்பதற்காக, தன் அரசியல் நிலைப்பாட்டைத் தமிழகத்தில் தக்க வைத்து, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஆசையை டெல்லி மேலிடத்துக்கு வெளிப்படுத்தும் விதமாக, தவறான பேட்டிகளைக் கொடுத்து, பாரதியாரின் பெருமையை மட்டுமல்ல அனைத்துக் கவிஞர்களின் புகழையும் பரப்பி வரும் திமுக அரசைக் கொச்சைப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தெலங்கானா விலிருந்து தமிழகம் வந்தவுடன், குறைந்தபட்சம் கடந்தகால பத்திரிக்கைச் செய்திகளைப் படித்து விட்டு திமுக அரசைக் குறைகூறுங்கள். அப்படியும் படிக்க இயலவில்லை என்றால், ஒருமாநிலத்துக்கு இருமாநிலம் என்ற நிலையில், ஆளுநர் பொறுப்பை வகிக்கும் சகோதரி தன் அதிகாரிகளிடமாவது, "அவ்வப்போது தமிழக அரசியல் நிலவரங்களைச் சொல்லுங்கள்” என்று கேட்டுத் தெரிந்து கொண்டு, திமுக மீது ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வையுங்கள் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்", என்று அவர் கூறியுள்ளார்.

# இன்று



13-9-2023

சக வருடம் 1945 பாத்ரபதம் 22
ஆவராபூ தொ.ர்த்து சாப்பிட்டால் தேகம் சௌரியமாகும்

| | | | |
|---|---|---|---|
| சோபகிருது ஆவணி 27 | SEP - WED புதன் | ஃபர் 26 | இராசிபலன் |

தேய்பிறை 256 / 109


தேய்.சதுர்த்தசி 59.49 (கா.05.59) மகம் 54.57 (கா.04.02) திடீரஜ் 21.45 ஆகஸ் 30.19 சித்த 54.57 மேல் அமிர்த. கடமுகூர்த்தம். மாத சிவராத்திரி.
திருச்செந்தூர், பெருவயல் இத்தலங்களில் முருகப் பெருமான் ரதோற்சவம். பிள்ளையார்பட்டி விநாயகர் நிஷப வாகனத்தில் வீதியுலா. கொடிய நகக.

| நல்லநேரம் | கௌ.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை 9.15-10.15 | 10.45-11.45 | 12.00 | 10.30 | 07.30 |
| மாலை 4.45-5.45 | 6.30-7.30 | 01.30 | 12.00 | 09.00 |

சூலம்: வடக்கு; பரிகாரம்: பால்
சந்திராஷ்டமம்: திருவோணம்
கரணம்: 6-7.30; சூரிய உதயம்: 6.03
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

இராசிபலன்: மேஷம் - வரவு; ரிஷபம் - ஆசை; மிதுனம் - நலம்; கடகம் - நட்பு; சிம்மம் - அமைதி; கன்னி - புகழ்; துலாம் - அன்பு; விருச்சி - லாபம்; தனுசு - உயர்வு; மகரம் - ஆதரவு; கும்பம் - சுகம்; மீனம் - பிரீதி

## சிந்திப்போம்.... செயல்படுவோம்









## வித்தியாசமான உழைப்பும் வேறுபட்ட சிந்தனையும் தேவை பொறியியல் வகுப்புத் தொடக்கவிழாவில் நா.முத்துநிலவன் பேச்சு



புதுக்கோட்டை, செப்.13–
கைக்குறிச்சி ஸ்ரீபாரதி மகளிர் பொறியியல் கல்லூரியில் பாரதி நினைவுநாளன்று நடந்த முதலாண்டு வகுப்புகள் தொடங்கி வைத்து, மாணவிகளிடம் உரையாற்றும்போது பேசிய கவிஞர் நா.முத்துநிலவன், "வெறும் உழைப்பால் பயனில்லை, வித்தியாசமான உழைப்புடன் கூடிய வேறுபட்ட சிந்தனையே இப்போதைய தேவை" என்று பேசினார்.

"உழைப்பே உயர்வு தரும் என்பது உண்மைதான் என்றாலும், வெறும் கடின உழைப்பால் மட்டும் பலன் கிடைக்காது. வித்தியாசமான உழைப்போடு, வேறுபட்ட சிந்தனைகளும் சேரும்போதுதான் அதன் பலன் வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன் தரும். இன்று உலகம் முழுவதும் நம் நாட்டு இளைஞர்கள் உலகப் பெரும் நிறுவனங்களின் முக்கியமான பொறுப்புகளில் இருப்பதன் ரகசியம் இதுதான்!

ஒருநாட்டின் அடையாளமாக அந்த நாட்டின் பெருநகரக் கட்டுமான வளர்ச்சியே முன்னிற்கிறது. சிங்கப்பூர், அரபு நாடுகளின் அடையாளம் அங்குள்ள வானளாவிய கட்டடங்களே கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நெஞ்சில் நிற்கின்றன. வளரும் நாடுகளில் இவை போலும் பெரும் கட்டுமானப் பணிகள் நிறைய உருவாகின்றன.

ஏட்டளவில் படித்துப் பட்டம் பெற்றால் அதற்குப் பலனிருக்காது. மாறாக, படிப்போடு, கற்பனை ஆற்றலையும் கலந்து புதிய புதிய மென்- பொருட்களை உருவாக்கி, "கற்பனையைக் கருவியாக்கி விற்பனை செய்த ஆற்றல்"தான் பில்கேட்ஸை உலகப் பணக்காரர் வரிசையில் பல ஆண்டுகள் உட்கார வைத்தது. இப்போதும் உலகம் முழுவதும் கணினி மென்பொருள் வன்பொருள் பொறியாளர்க்கான தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

வேலைக்குப்போனபிறகும் மக்களுக்கான பணிகளைத் தொடரும் யாரையும் மக்கள் மறப்பதில்லை. அப்துல் கலாம், கல்பனா சாவ்லா, தாமஸ் ஆல்வா எடிசன், கலிலியோ என மறைந்த பிறகும் வாழ்பவராக மக்கள் பயன்பாட்டுக்கான அறிவியலைக் கண்டுபிடித்துத் தந்தவர்கள் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். பாரதியும் அப்படித்தான் "நான் வீழ்வேன் என நினைத்தாயோ?" என்று கேட்டதுபோல இந்த 103ஆவது நினைவு நாள் அன்றும் நினைக்கப்படுகிறான். தான்பெற்ற கல்வியால் வீடும், நாடும், உலகமும் பயனடையும்படி, இன்று தொடங்கும் உங்கள் கல்வி அமையவேண்டும்.

அதிலும் குறிப்பாகப் பெண்கள் படிப்பதே அவர்கள் வாழ்க்கையை முன்னேற்றும். பெற்றோர்கள் தம் பெண்களுக்கு வேறு சொத்து ஏதும் சேர்த்து வைக்க வேண்டியதில்லை, கல்வி தந்தால் அதுவே மிகப் பெரிய திருமணச் சீராக இருக்கும் எனவே இங்குள்ள பெற்றோரை இடையில் "பொருந்தி வருகிறது" என்று, படிப்பை முடிக்கும் முன்னரே திருமணம் செய்து, படிப்பை நிறுத்திவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

வகுப்புகள் தொடக்கவிழாவுக்கு, ஸ்ரீ பாரதி கல்விக் குழுமங்களின் தலைவர் குரு.தனசேகரன் தலைமை ஏற்றார். கல்லூரி முதல்வர் ச.திலகவதி வரவேற்புரையாற்றினார். தாளாளர் கனகராஜன், அறங்காவலர் கிருஷ்ண மூர்த்தி, பஷீர் முகமது வாழ்த்துரையாற்றினர். கல்லூரி மாணவியரின் கலைநிகழ்ச்சி நடனமும் நடைபெற்றது.

## சென்னையில் 3 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிடமாற்றம் தமிழக அரசு உத்தரவு



சென்னை , செப்.13–
சென்னையில் 3 ஐபிஎஸ் அதிகாரிகளை பணியிடமாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, தமிழக அரசின் முதன்மைச் செயலாளர் பி.அமுதா பிறப்பித்துள்ள உத்தரவில், "பெருநகர சென்னை கிழக்கு மண்டல சட்டம் ஒழுங்கு இணை ஆணையரான ஐபிஎஸ் அதிகாரி திஷா மிட்டல், கட்டாய காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தாம்பரம் காவல் ஆணையரகத்தின் பள்ளிக்கரணை சட்டம் ஒழுங்கு துணை ஆணையரான ஐபிஎஸ் அதிகாரி தீபா சதயன் கட்டாய காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அமலாக்கப்பிரிவு கண்காணிப்பாளரான ஐபிஎஸ் அதிகாரி ஆதர்ஷ் பச்சேரா, திருநெல்வேலி கிழக்கு சரக இணை ஆணையராக பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் பாஜக சார்பில் நடந்த இந்து சமய அறநிலையத்துறை முற்றுகை போராட்டத்தைக் கட்டுப்படுத்த தவறியதால், ஐபிஎஸ் அதிகாரி திஷா மிட்டலும், சென்னை கிழக்கு கடற்கரை சாலையில், நடந்த இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட குளறுபடிகளால் எழுந்த புகாரின் காரணமாக, துணை ஆணையர் தீபா சத்யனும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கலாம் என்று காவல்துறை வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.






## தேசத் துரோக சட்டத்துக்கு எதிரான மனுக்கள் அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றியது உச்ச நீதிமன்றம்



புதுடெல்லி , செப்.13–
தேசத் துரோக வழக்குகள் பதிவதற்குக் காரணமாக உள்ள சட்டப்பிரிவு 124A-க்கு எதிராக தொடரப்பட்ட மனுக்களை அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றி உச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்திய தண்டனைச் சட்டத்தின் 124A (தேசத் துரோகச் சட்டம்) செல்லுபடியாகும் தன்மையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வு விசாரித்து நேற்று தீர்ப்பளித்தது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: சட்டப்பிரிவு 124A இந்திய தண்டனைச் சட்டத்தின் ஒரு பகுதியாகும். மே 2022-இல் உச்ச நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து இந்தச் சட்டத்தின் பயன்பாடு நிறுத்தப்பட்டது. அதோடு, தேசத் துரோகச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய அரசுக்கு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியது.

இதையடுத்து, மத்திய அரசு பாரதிய நியாய சன்ஹிதா மசோதாவைக் கொண்டு வந்துள்ளது. அந்த மசோதாவில், வெளிப்படையாக பிரிவு 124A இல்லாவிட்டாலும், அது பிரிவு 150-ஐ கொண்டுள்ளது. இந்த புதிய மசோதாவில் முன்மொழியப்பட்ட விதி 'தேசத் துரோகம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கிறது. அதேநேரத்தில், அதற்கு பதிலாக "இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்தை விளைவித்தல்" என்ற பதம் இடம்பெற்றுள்ளது.

அதோடு, இந்த மசோதா சட்டமானாலும், அது வருங்கால குற்றங்களுக்கு மட்டுமே பொறுந்தும் வகையில் உள்ளது. கடந்த கால விளைவுகளுக்கு அது பொறுந்தாது. சுருக்கமாக, 124A பிரிவின் கீழ் தற்போதுள்ள குற்றவியல் நடவடிக்கைகள் புதிய சட்டம் இருந்தாலும் தொடரும். ஆனால், தேசத் துரோக சட்டம் 124A-ன் கீழ் தற்போது ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளன. எனவே, சட்டம் 124A-ன் செல்லும் தன்மை குறித்து ஒரு முடிவுக்கு வந்தால் மட்டுமே அந்த மனுக்கள் மீது தீர்ப்பு அளிக்க முடியும்.

எனவே, சட்டம் 124A-ன் செல்லும் தன்மைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள மனுக்கள், அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றப்படுகின்றன. அதோடு, தற்போது நாடாளுமன்ற நிலைக்குழு முன் இருக்கும் புதிய மசோதாவின் நிலையை அறியும் வரை பிரிவு 124A-க்கு எதிரான வழக்கை ஒத்திவைக்க வேண்டும் என்ற அரசின் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரிக்கிறது. இவ்வாறு தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடரையொட்டி பணியாளர்களுக்கு புதிய சீருடை



புதுடெல்லி , செப்.13–
வரும் 18-ஆம் தேதி தொடங்கிஒருவார காலத்துக்கு நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில் நாடாளுமன்ற ஊழியர்களுக்கு சிறப்பு சீருடை தயார் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சீருடையில் நேரு மாடல் ஜாக்கெட்டுகள், காக்கி நிற கால் சட்டைகள் என்று முழுக்க முழுக்க இந்திய சார்பு இருக்கும் என்று தெரிகிறது.

செப்டம்பர் 18-ஆம் தேதி கூட்டத் தொடர் தொடங்கினாலும் கூட 19-ஆம் தேதி விநாயகர் சதுர்த்தி நாளில்தான் புதிய நாடாளுமன்றத்துக்கு இடம்பெயரும் நிகழ்வு நடைபெறுகிறது. அன்றைய தினம் சிறிய பூஜைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், ஊழியர்களுக்காக புதிய சீருடை தயார் நிலையில் உள்ளது. இவற்றை நிஃப்ட் (NIFT-P) எனப்படும் பாட்னா தேசிய ஃபேஷன் தொழில்நுட்ப மையம் தயாரித்துள்ளது. நாடாளுமன்றத்தில் பணியாற்றும் அதிகாரிகளின் சீருடை இனி அடர் இளஞ்சிவப்பு நிறத்திலான அல்லது மஜெண்டா நிறத்திலான நேரு ஜாக்கெட் மாடலில் இருக்கும். இவற்றில் தாமரைப் பூக்கள் அச்சாகி இருக்கும். கால் சட்டை காக்கி நிறத்திலேயே இருக்கும். அதேபோல் நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் காவலர்களின் உடைகளும் மாற்றப்படுகின்றன. அவர்கள் மணிப்பூரி தலைப்பாகை அணிந்திருப்பார்கள்.

நாடாளுமன்ற வளாகப் பாதுகாவலர்களின் சீருடையும் மாற்றப்படுகிறது. சஃபாரி உடைக்குப் பதிலாக அவர்களுக்கு ராணுவத்தினர் அணியும் உருமறைப்பு (கேமஃப்ளாஜ்) உடைகள் வழங்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து பாட்னா நிஃப்ட் பேராசிரியர் தர்மேந்திர ரத்தோர் கூறுகையில், "புதிய சீருடைகள் அவரவர் பணியைப் பிரதிபலிக்கும் வகையிலும், அவைகளின் மாண்பை அடையாளப்படுத்தும் விதத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளன. 16 வகையான சீருடைகளை வடிவமைத்துள்ளோம். ஒவ்வொரு பிரிவு பணியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஏற்றவாறு ஆடைகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆண்/பெண் ஊழியர்களுக்கு ஏற்றார் போல் வடிவமைகப்பட்டுள்ளன. நாடாளுமன்ற புதிய கட்டிடத்தின் வடிவமைப்பு, நிறம் ஆகியனவற்றையும் இந்த சீருடைகள் பிரதிபலிக்கும். அனைத்து சீருடைகளிலும் செல்போனை வைத்துக் கொள்வதற்காகவே பிரத்யேக பாக்கெட்டுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன" என்றார்.

## திருச்சியில் உலக பிசியோதெரபி தின விழா மற்றும் விருது வழங்கும் விழா





திருச்சி , செப்.13–
தமிழ்நாடு பிசியோ விஷன் பவுண்டேஷன் சார்பாக நடைபெற்ற இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களாக திருச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சந்திரமோகன் ஆல் இந்தியா ரேடியோ எக்ஸிக்யூட்டிவ் அலுவலர் முருகானந்தம், எக்ஸெல் கல்லூரி முதல்வர் ஐயப்பன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்த இந்நிகழ்வில் தமிழ்நாடு முழுவதிலிருந்து விருதுக்கென தேர்வாகிய 35 பிசியோதெரபி மருத்துவர்களுக்கு சிறந்த பிசியோதெரபி மருத்துவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தமிழ்நாடு பிசியோ விஷன் பவுண்டேஷன் டாக்டர் காமராஜ் ஒருங்கிணைக்க டாக்டர் ஜெயராணி நிகழ்வினை தொகுத்து வழங்கினார். ஆல் இந்தியா ரேடியோ ஒலி பரப்புத்துறை நிர்வாக அலுவலர் முருகானந்தம் விருதினை வழங்கி பேசுகையில்; நவீன உலகிற்கு பிசியோதெரபி சிறப்பான முறையில் அறிமுகமாகி வருகிறது. அரசு பணியை விரைவில் பெற இயன்முறை மருத்துவர்கள் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும். கூடுதல் கல்வித் தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். சமூக நலனுக்காக இயன்முறை மருத்துவர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு தொடர்ந்து சேவையாற்ற வேண்டும் என்று சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளுக்காக தொடர்ந்து சேவையாற்றி வரும் ஆலங்குடி கோவிந்தசாமி, அறந்தாங்கி ராம் பரத்வராஜ், திருமயம் செந்தில்குமார், சிவகங்கை கோமதி என தமிழ்நாட்டில் இருந்து சுமார் 35 இயன்முறை மருத்துவர்களுக்கு விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது.பிசியோ விஷன் பவுண்டேஷன் இணை இயக்குனர் விஜய் நன்றி கூறினார்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் விநாயக சதுர்த்தி விழாவினை முன்னிட்டு சட்டம், ஒழுங்கு தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம்



புதுக்கோட்டை , செப்.13–
புதுக்கோட்டை மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழாவினை முன்னிட்டு சட்டம், ஒழுங்கு தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம், மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று நடைபெற்றது.


இக்கூட்டத்தில் அவர் தெரிவித்ததாவது; புதுக்கோட்டை மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழாவிற்காக பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்விழாவிற்காக விழா ஒருங்கிணைப்பாளர்கள் விநாயகர் சிலை அமைப்பதற்கு நில உரிமையாளர்கள், காவல் துறை, தீயணைப்புத்துறை, மின்சாரதுறையிடம் தடையின்மை சான்றுகளை பெற்று உரிய அனுமதியினை வருவாய்த்துறையிடம் பெற வேண்டும்.

மேலும் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் நடைமுறைப்படுத்தும் வழிமுறைகளின்படி, நீரில் கரையக்கூடிய, நச்சு இல்லாத இயற்கை சாயங்கள் பூசப்பட்ட சிலைகளை தூய களிமண்ணால் தயாரிக்க வேண்டும். சிலை அமைத்து வழிபாடு செய்யும் இடம் மற்றும் அதனைசுற்றிதேவையான முதலுதவிப் பொருட்கள், மருத்துவப் பொருட்கள் மற்றும் எளிதில் தீப்பிடிக்காதபொருட்கள் வைத்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

கூம்பு வடிவிலான ஒலி பெருக்கியை பயன்படுத்த அனுமதி கிடையாது. அதற்கு மாற்றாக பெட்டி வடிவிலான ஒலி பெருக்கியை மட்டுமே பயன்படுத்த வேண்டும். விழா ஒருங்கிணைப்பாளர்கள் 2 தன்னார்வலர்களை நியமித்து சிலையை பாதுகாக்க வேண்டும். எந்த சூழ்நிலையிலும் மற்ற மதத்தினரை பாதிக்கும்,துன்புறுத்தும் வகையில் சத்தமாக கோஷங்களை எழுப்ப அனுமதிக்கக் கூடாது. மேலும் காவல்துறையால் பரிந்துரைக்கப்பட்ட வழித்தடங்களில் மட்டுமே சிலையை வாகனங்களில் கொண்டு சென்று, மாவட்ட நிர்வாகத்தால் சிலைகளை கரைக்க அனுமதிக்கப்பட்ட நீர்நிலைகளில் கரைக்க வேண்டும். அவ்வாறு செல்லும்போது பட்டாசு வெடிபொருட்களை வெடிக்க அனுமதி கிடையாது. எனவே விழாக் குழுவினர் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை உரிய முறையில் கடைபிடிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, , மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) து.தங்கவேல் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## திமிரி அடுத்த பழையனூர் கீழ்ப்பாடி கிராமத்தில் தொட்டால் உதிரும் கால்வாய் சுவர் அதிகாரிகள் ஆய்வு



ஆற்காடு , செப்.13–
திமிரி அருகே கழிவுநீர் கால்வாயின் சிமெண்ட் கலவை தொட்டாலே பெயர்ந்து வருவதாக வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளது. இதையடுத்து, அதிகாரிகள் ஆய்வு நடவடிக்கை மேற்கொண்டனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் திமிரி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பழையனூர் கீழ்ப்பாடி கிராமம் உள்ளது. இந்த கிராமத்தில் 'பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம யோஜனா' திட்டத்தின் கீழ் 5 தெருக்களில் ரூ.20 லட்சம் மதிப்பில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த சில நாட்களுக்கு முன்பு கீழ்ப்பாடி கிராமத்தில் 4 லட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த கால்வாய் குறித்துகடந்த சில நாட்களுக்கு முன்பு அப்பகுதியைச் சேர்ந்த ஒரு நபர் வீடியோ ஒன்றை பதிவுசெய்து சமூக வலைதளங்களில் பதிவு செய்தார்.

அந்த வீடிய தற்போது வைரலாகி வருகிறது. அதில், கால்வாய் அமைக்க பயன்படுத்தப்பட்ட சிமெண்ட் கலவை தொட்டாலே பெயர்ந்து வருகிறது. அதன் தரம் இவ்வளவு தான் என்ற மாதிரி அந்த வீடியோவில் பதிவாகியுள்ளன. இதையடுத்து, திமிரி வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அதிகாரிகள் நேற்று அந்த இடத்தை வீடியோ பதிவு செய்த நபர் மற்றும் பொதுமக்கள் ஆகியோருடன் சேர்ந்து ஆய்வு செய்தனர்.

அந்த வீடியோவில் குறிப்பிட்டுள்ள இடம் மட்டுமின்றி பல்வேறு இடங்களில் இயந்திரம் கொண்டு துளையிட்டும், கடப்பாரையால் குத்தியும் சோதித்தனர். இதில், கால்வாய் தரமாக அமைக்கப்பட்டு வருவது தெரியவந்தது. மேலும், கால்வாய் தரம் குறித்தும் பொதுமக்களுக்கும் மற்றும் அந்த இளைஞருக்கும் அதிகாரிகள் தரப்பில் விளக்கப்பட்டது.

இதுகுறித்து அதிகாரிகள் கூறும் போது, "இப்பகுதியில் 5 இடங்களில் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில், வீடியோவில் பதிவான இடத்தின் பணிகள் இன்னும் முடியவில்லை. அதை வீடியோவை பதிவு செய்த நபர் கையில் எடுத்தபோது, உடனே வந்துள்ளது. இதனால், கால்வாய் தரம் குறித்து அவருக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவரையும் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் அதன் தரத்தை சோதனை செய்து காண்பித்தோம். மேலும், வீடியோ பதிவான இடத்தில் உள்ள சிமெண்ட் கலவையும், அந்த பகுதியில் வேறு சில இடங்களில் மாதிரிகள் சேகரித்து தரத்தை சோதனைக்கு அனுப்பி உள்ளோம்" என்றனர்.

# அருள்மிகு ஸ்ரீ தேவி திருவீதி அம்மன் ஆலய கும்பாபிஷேக விழா

சென்னை ,செப்13-

சென்னை, அண்ணா நகர் மேற்கு, பழைய திருமங்கலம், 14வது பிரதான சாலையில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ தேவி திருவீதி அம்மன் ஆலய ஜீர்னோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா 11.09.2023 திங்கள் கிழமை அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.



நிகழும் மங்களகரமான ஸ்ரீ சோபகிருது வருடம், ஆவணி மாதம் புனர்பூசம் நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோகத்தில் சுப தினத்தில் காலை 9.00 மணிக்கு மேல் 10:30 மணிக்குள் ஸ்ரீ தேவி திருவீதி அம்மனுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவினை தொடர்ந்து அபிஷேக ஆராதனைகள், தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து சிறப்பு அன்னதானமும் நடைபெற்றது.

கும்பாபிஷேகவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகி மேகநாதன் அவர்களுடன் இணைந்து திருமணி, ஜெகதீசன் மற்றும் திருமங்கலம் ஊர் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தார்.

104வது வட்ட மாமன்ற உறுப்பினர் டி.வி.செம்மொழி, வாமதேவ கிரிஜா செம்மொழி, திருமங்கலம் பா.ரஞ்சித், வில்லிவாக்கம் பகுதி துணை செயலாளர் பா.இளையா, எம்.புஷ்பராஜ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கும்பாபிஷேக விழாவினை சிறப்பித்தார்.

### பெரியபாளையம் ஆடித்திருவிழாவிற்கு அடிப்படை வசதி செய்தமைக்கு

# ரூ.11 லட்சத்து 87 ஆயிரம் செலவு செய்தமைக்கு எல்லாபுரம் ஒன்றிய குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது





ஊத்துக்கோட்டை, செப்13-

திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையத்தில் உள்ள எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் ஒன்றிய குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு, ஒன்றிய பெருந்தலைவர் வடமதுரை கே.ரமேஷ் தலைமை தாங்கினார். துணை பெருந்தலைவர் வக்கீல் கே.சுரேஷ் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் பெரியபாளையம் பவானி அம்மன் திருக்கோவிலில் 14 வாரங்கள் நடைபெறும் ஆடித்திருவிழாவிற்கு வடமதுரை, ராள்ளபாடி, அரியப்பாக்கம், ஆத்துப்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் பக்தர்களின் வசதிக்காக தற்காலிக கழிப்பறைகள் அமைத்தது, தற்காலிக பஸ் நிறுத்தம் அமைத்தது, குடிநீர் சின்டெக்ஸ்டேங்க் அமைத்தது உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்த வகையில் ரூ.11 லட்சத்து 87 ஆயிரம் செலவு செய்தமைக்கும், மாகரல் ஊராட்சியில் பவானி அம்மன் கோவில் குளம் கரையை பலப்படுத்தும் பணிக்கு ரூ.1.5 லட்சம், மாளந்தூர் ஊராட்சியில் தொண்டர் குளம் சீரமைக்கும் பணிக்கு ரூ.1லட்சம் செலவு செய்தமைக்கும், ஒன்றியத்தில் பல்வேறு பணிகள் மேற்கொண்டமைக்கு ஒப்புதல் அளித்தும் ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. முன்னதாக, அனைவரையும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சிகள்) நடராஜன் வரவேற்றார். முடிவில், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) சத்தியமூர்த்தி நன்றி கூறினார்.

# ஆரணியில் குண்டும், குழியுமாக உள்ள சாலை வளைவை சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை





ஊத்துக்கோட்டை, செப்13-

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஆரணி பேரூராட்சியில் 15 வார்டுகள் உள்ளது.இந்நிலையில்,இந்த பேரூராட்சியில் உள்ள ஜி.என்.செட்டி தெரு,பஜார் தெரு உள்ளிட்ட பல்வேறு தெருக்களில் சாலைகள் குண்டும், குழியுமாக போக்குவரத்துக்கு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

இந்த சாலைகளை தற்காலிகமாக சொப்பனிடுமாறு பல்வேறு தரப்பு மக்களும் பேரூராட்சி நிர்வாகத்திடம் கோரிக்கை வைத்தும் எந்த பயனும் இல்லை. இந்நிலையில்,ஜி.என்.செட்டி சாலையில் இருந்து புதுவாயல் நோக்கிச் செல்லும் சாலை வளைவு குண்டும்,குழியுமாக உள்ளது.

இந்த சாலையில் நாள்தோறும் நூற்றுக்கணக்கான லாரிகளும், ஏராளமான பள்ளி - கல்லூரிக்கு செல்லும் பஸ்களும்,அரசு போக்குவரத்துக் கழக பஸ்களும், தனியாருக்கு சொந்தமான வேன்களும்,இரு சக்கர வாகனங்களும் சென்று வருகின்றது.எனவே.பெரும் விபத்து ஏற்படுவதற்கு முன்பாக மாவட்ட நிர்வாகம் இந்த சாலையை சீரமைக்க வேண்டும் என வாகன ஓட்டிகளும்,பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# காரைக்கால், வேளாண் அறிவியல் நிலையத்தில் சம்பா நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் பயிற்சி நடத்தப்பட்டது

காரைக்கால்,செப்,13

காரைக்கால் மாதூர், வேளாண் அறிவியல் நிலையத்தில் ஹைதராபாத்தில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் - மத்திய வறண்ட நில வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தேசிய பருவநிலை மாற்றத்திற்கு உகந்த மிள் தன்மையுள்ள வேளாண் திட்டத்தின் (நிக்ரா) கீழ் சம்பா நெல் சாகுபடி பற்றிய பயிற்சி நேற்று நடத்தப்பட்டது.



இப்பயிற்சியை துவக்கி வைத்து பேசிய வேளாண் அறிவியல் நிலையத்தின் முதல்வர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் சீ. ஜெயசங்கர் விவசாயிகள் நெல் சாகுபடி சார்ந்த தொழில்நுட்பங்களை முறையாக கையாண்டால் அதிக மகசூல் பெறலாம். இரசாயன உரமிடுதல் மற்றும் களைக்கொல்லிகள் ஆகியவற்றை அதிக அளவு பயன்படுத்துவதால் விவசாயிகளின் இடுபொருள் செலவு அதிகரிப்பதுடன் சுற்றுச்சூழல் மற்றும் மண் மாசடைகிறது.

ஆகவே விவசாயிகள் முடிந்த அளவு இரசாயன உரங்களை தவிர்த்து இயற்கை உரங்களான பண்ணை கழிவு, மண்புழு உரம், பசுந்தாள் உரங்களை பயன்படுத்த வேண்டும் என்றார். வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப உரையாற்றிய முனைவர். வி. அரவிந்த் தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்) விதை தேர்வு, விதை நேர்த்தி, விதைப்பு முறை, நீர்ப்பாசனம், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், ஒருங்கிணைந்த களை மேலாண்மை மற்றும் அறுவடை ஆகிய தலைப்புகளில் விவசாயிகளிடையே உரையாற்றினார். மேலும் நெற்பயிரில் வரும் நோய்களை கட்டுப்படுத்த நன்மை செய்யும் எதிர் உயிர் பாக்டீரியாவான பேசிலஸ் சப்டிலிஸ் பயன்படுத்தி நெல்லில் விதை நேர்த்தி செய்தல் குறித்த செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது.

தொழில்நுட்ப வல்லுநர் முனைவர். சு. திவ்யா, நெல்லில் ஒருங்கிணைந்த நோய் மற்றும் பூச்சி மேலாண்மை என்ற தலைப்பில் உரையாற்றினார். இப்பயிற்சியில் சுமார் 60 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர். நிக்ரா திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட 60 விவசாய பயனாளிகளுக்கு திருச்சி-4, காரைக்கால்-2 ஆகிய நெல் இரகங்கள் 24 கிலோவும், அசோஃபாஸ்- 1 கிலோ, பேசிலஸ் சப்டிலிஸ் - 250 கிராம், வரப்பு உளுந்து வம்பன் 11 - 1 கிலோ வழங்கப்பட்டது.



▶ சென்னை மாவட்ட ஆட்சியராக நியமிக்கப்பட்டுள்ள ரஷ்மி சித்தார்த் ஜகடே, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார் !



▶ புதுவை அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகள், குவளைகள். தட்டுகளின் பயன்பாட்டால் ஏற்படும் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை நான் நன்கு அறிவேன். இப்பொருட்கள் மக்கி மறைவதற்கு நூற்றாண்டுகளுக்கு மேல் ஆகும் என்பதை நான் உணர்கிறேன். இவைகள் கால்வாய்களை அடைக்கின்றன நிலத்தை நஞ்சாக்குகின்றன என்றும் மேலும் எரிப்பதால் காற்று மாசுபடுகின்றன நீர் நிலைகளில் வாழும் உயிரினங்கள் அழிகின்றன உணவுகள் விஷமாகின்றன புதுவை அரசு இத்தகைய பொருட்களின் பயன்பாட்டிற்கு தடை விதித்துள்ளதை நான் மதிக்கிறேன் என்றும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த மாட்டேன் எனவும் மெல்லிய பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு இல்லாத புதுவையை உருவாக்கும் புதுவை அரசின் நோக்கத்திற்கு ஆதரவாக இருப்பேன் எனவும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். மேலும் இந்நிகழ்வில் அரசு அதிகாரிகள். கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்கள் அலுவலக ஊழியர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றுக்கொண்டார்கள்.

# சீர்காழி அருகே ஸ்ரீ செங்கழுநீர் விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்

## திரளான பக்தர்கள் சுவாமி தரிசனம்



*சீர்காழி, செப்,13*

*மயிலாடுதுறை மாவட்டம்சீர்காழிஅருகே காரைமேடு கிராமத்தில் மிகவும் பழமையான ஸ்ரீ செங்கழுநீர் விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது.*

*இவ் ஆலயத்தில் கும்பாபிஷேகம் செய்ய முடிவு செய்யப்பட்டு திருப்பணிகள் நிறைவடைந்த நிலையில் கடந்த 10 ஆம் தேதி மகா கணபதி ஹோமமும் நவகிரக ஹோமத்துடன் முதல் காலயாகசாலைபூஜைகள் தொடங்கிய நிலையில் கும்பாபிஷேக தினமான நேற்று இரண்டாம் கால யாகசாலை பூஜைகள் முடிவுற்று பூர்ணாகூதி மகா தீபாரதனை நடைபெற்றது.*

*இதனைத்தொடர்ந்து சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கடம் புறப்பாடு நடைபெற்று விமான கலசத்தை அடைந்த பின்னர் விமான கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மூலவர் அபிஷேகமும் நடைபெற்றது.*

*இதில் காரைமேடு கிராமத்தை சேர்ந்த திரளான பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.*



▶ திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், குமாரவயலூர் நியாய விலைக் கடையில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார்.நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவு பொருட்களின் இருப்பு குறித்து கேட்டறிந்தார்.

# சித்தம்பாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் இறுதி ஊர்வலத்தில் பட்டாசு வெடித்ததில் ஆறு பேர் படுகாயம்

ஊத்துக்கோட்டை,செப்13-

திருவள்ளூர் மாவட்டம், வெங்கல் அருகே உள்ளது சித்தம்பாக்கம் ஊராட்சி ஆகும்.இந்த ஊராட்சியின் முன்னாள் தலைவர் ஜெகதீசன்(வயது56) என்பவர் மாரடைப்பால் நேற்று முன்தினம் பலியானார்.



இந்நிலையில்,அவரது இறுதி ஊர்வலம் அவர் வசித்து வந்த பெருமாள் கோவில் தெருவில் உள்ள அவரது வீட்டில் இருந்து சித்தம்பாக்கம் கிராமத்தில் உள்ள மயானத்துக்கு கொண்டு சென்று அன்று மாலை அடக்கம் செய்தனர். அவரது உடலை கொண்டு சென்ற வாகனத்தின் முன் பகுதியில் பட்டாசுகள் இருந்த பையை மாட்டி வைத்திருந்தனர். அப்பொழுது ஒரு ராக்கெட் வெடித்தனர்.

அதிலிருந்துநெருப்புசிதறி பட்டாசு மாட்டி வைத்திருந்த பையில் விழுந்தது.இதனால் கண்ணிமைக்கும் நேரத்தில் அனைத்து பட்டாசுகளும் படபடவென வெடித்து சிதறியது.இதனால் இறுதி ஊர்வலத்தின் வாகனத்தின் அருகே நின்று கொண்டிருந்த ஜெகதீசனின் மகன் விவேக் என்பவரது நண்பர்களான முகேஷ் (18),சுரேஷ், அஸ்வின் உள்ளிட்ட ஆறு பேர் படுகாயம் அடைந்தனர். அருகில் இருந்தவர்கள் உடனடியாக அவர்கள் ஆறு பேரையும் மீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரியில் கொண்டு சென்று சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

இந்நிலையில், ஜெகதீசனின் உடல் அடக்கமும் நடைபெற்றது. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த மூன்று பேரில் முகேஷ் என்பவர் போரூரில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார்.இரண்டு பேர் கண் சிகிச்சைக்காக பூந்தமல்லியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இச்சம்பவம் இப்பகுதியில் பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியது.

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை விண்ணப்பங்கள் 35% நிராகரிப்பு ஏன்? – காரணம் வெளியீடு

சென்னை,செப்,13

சென்னை, பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழி வகுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கான விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த மாதம் 24-ந் தேதியன்று தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கிவைத்தார். அதைத் தொடர்ந்து விண்ணப்பப்பதிவு முகாம்கள் 2 கட்டங்களாக நடத்தப்பட்டன.

இந்த முகாம்கள் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்களில் 1.06 கோடி(65%) விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டதாகவும், 56.5 லட்சம்(35%) விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் தகவல் வெளியானது. இந்நிலையில்விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டது ஏன் என்பதற்கான காரணங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி மகளிர் உரிமைத்தொகைதிட்டத்திற்கு விண்ணப்பித்தவர்களில் அரசு பணியில் இருப்பவர்கள், அவர்களது குடும்ப தலைவிகள், ஆண்டுக்கு ரூ.2.5 லட்சத்துக்கும் அதிகமாக வருமானம் ஈட்டும் குடும்பங்களில் உள்ள குடும்ப தலைவிகள் ஆகியோரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே போல் ஆண்டிற்கு 3,600 யூனிட்டுக்கும் அதிகமான மின்சாரம் பயன்படுத்துவோர், சொந்தமாக கார், டிராக்டர் உள்ளிட்ட நான்கு சக்கர வாகனங்கள் வைத்திருப்போர் ஆகியோரின் குடும்ப தலைவிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் குறித்து, சம்பந்தப்பட்ட மகளிருக்கு வரும் 15-ந்தேதி குறுஞ்செய்தி மூலம் தகவல் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வங்கக் கடல் பகுதியில் அடுத்த 24 மணி நேரத்தில் புதிதாக குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு

சென்னை,செப்,13

வங்கக் கடல் பகுதியில் அடுத்த 24 மணி நேரத்தில் புதிதாக குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக நேற்று முதல் செப்டம்பர் 18-ஆம் தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது. இந்த நிலையில், வடமேற்கு மற்றும் அதனையொட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதியில் அடுத்த 24 மணி நேரத்துக்குள் புதிதாக குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக்கக்கூடும் என்று வானிலை மையம் கணித்துள்ளது.

மேலும், இது வலுவடைந்து மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து தெற்கு ஒடிசாவுக்கும் வடக்கு ஆந்திரப் பிரதேசத்துக்கும் இடையே கரையை நோக்கி நகரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சீர்காழியில் பாட்டாளி மக்கள் கட்சி நிர்வாகி மீது

# கொலை முயற்சி வழக்கு பதிவு செய்த காவல்துறையை கண்டித்து கருப்பு கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம்

சீர்காழி,செப்,13

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அடுத்த மகேந்திரப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் சிவபாலன் (40). பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்த இவர் கொள்ளிடம் ஒன்றிய குழு உறுப்பினராக இருந்து வருகிறார்.



இவர் கடந்த மாதம் 27ம் தேதி இரு சக்கர வாகனத்தில் ஆரப்பள்ளம் அருகே சென்று கொண்டிருந்த போது மகேந்திரப்பள்ளியை சேர்ந்த செல்வமணி, பாலச்சந்திரன் ஆகிய இருவரும் சிவபாலனை காரை விட்டு மோதி அறிவாளால் வெட்ட முயன்றதாக கூறப்படுகிறது.

அப்போது செல்வமணி கையில் வைத்திருந்த அரிவாளை சிவபாலன் பிடுங்கி செல்வமணியை வெட்டியதாக கூறப்படுகின்றது இதில் செல்வமணியும், சிவபாலனும் காயங்களுடன் விழுந்து கிடந்துள்ளனர்.

தகவலறிந்த கொள்ளிடம் போலிசார் இருவரையும் மீட்டு 108 வாகனம் மூலம் சீர்காழி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து கொள்ளிடம் போலீசார் வழக்கு பதிவு செய்து கார் டிரைவர் பாலச்சந்திரனை கைது செய்த நிலையில், ஒன்றியக் குழு உறுப்பினர் சிவபாலன் மீது செல்வமணி அளித்த புகாரின்படி கொலை முயற்சி வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இதனிடையே ஒன்றிய குழு உறுப்பினர் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்ததை கண்டித்தும் கொலை முயற்சி வழக்கை ரத்து செய்ய கோரியும், உண்மையான குற்றவாளிகள் மீது வழக்குப் பதிவு செய்து கைது செய்ய கோரியும் கொள்ளிடம் அருகே முதலைமேடுதிட்டு கிராமத்தில் வீடுகள் மற்றும் தெருக்களில் கிராம மக்கள் கருப்புக்கொடி கட்டியும் கிராம மக்கள் கருப்புக் கொடிகளுடன் காவல்துறையை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



▶ கருணாநிதியின் நூற்றாண்டு விழாவையொட்டி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் நேற்று நடைபெற்ற முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாமில், பெண்குழந்தைகளுக்கு வைப்பீடு பத்திரங்களை மாவட்ட வருவாய் அலுவலர் மேனகா வழங்கினார். உடன் மாவட்ட சமூக நல அலுவலர் (பொ) அருள்மொழி உள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் கீரமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் மாணவிகளுக்கு வழங்கி உரையாற்றினார். நிகழ்ச்சியில் கீரமங்கலம் பேரூராட்சி மன்ற தலைவர் சிவக்குமார், கவுன்சிலர்கள்,ஆசிரியர்கள் மாணவிகள் கலந்து கொண்டனர்.

# தென்காசி மாவட்டத்தில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சியர் ஆய்வு

தென்காசி, செப்.13-



தென்காசி மாவட்டத்தில் பல்வேறு துறைகள் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் பார்வையிட்டு ஆய்வு செய்தார், பின்னர் ஆட்சியர் தெரிவித்ததாவது, தென்காசி நகராட்சியில் நடைபெற்று வரும் தேசிய நகர்ப்புற நல குழுமம் 2021-22 திட்டத்தின் கீழ் ரூ.75 லட்சம் மதிப்பில் மலையான் தெருவில் நல மையம் கட்டும் பணிகளையும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022- 23 ன் கீழ் ரூ32 லட்சம் மதிப்பில் நகராட்சி எல்லைக்குட்பட்ட வண்ணான் குளம் மேம்பாட்டு பணிகளையும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022- 23 ன் கீழ் ரூ.38 லட்சம் மதிப்பில் டிஎன்ஹெச்பி காலனி எல் பிளாக் வார்டு எண் பி.பிளாக் 4, நகர எவை எண் 37, 39, 40, 41, 42ல் பூங்கா அமைத்தல் பணிகளையும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ 42.50 லட்சம் மதிப்பில் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா நகரில் உள்ள எம்சிசி மையத்தில் பொருள் மீட்பு வசதிகள் மையம் அமைக்கும் பணிகளையும், அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ 21.80 மதிப்பில் நகராட்சி எல்லைக்குட்பட்ட சக்தி நகரில் பூங்கா அமைக்கும் பணிகளையும், ஆய்வு செய்யப்பட்டது அனைத்து வளர்ச்சி திட்ட பணிகளும் விரைவில் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரும் என மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச் சந்திரன் தெரிவித்தார்.

ஆய்வின் போது தென்காசி நகர் மன்றத் தலைவர் சாதிர், நகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர் ஹசீனா, உதவி பொறியாளர் ஜெயப்ரியா, மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.



புதுக்கோட்டை நகராட்சி வார்டு 22-ல் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் முத்துராஜா தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடை திறப்பு விழாவில் எம்எல்ஏ முத்துராஜா, முன்னாள் எம்எல்ஏ பெரியண்ணன் அரசு, நகர மன்ற தலைவர் திலகவதி, திமுக நகர செயலாளர் செந்தில் உள்ளிட்ட நகர மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மணல் அகழ்வு முறைகேடு தமிழகத்தில் 25–க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை சோதனை

சென்னை , செப்.13-



மணல் அகழ்வு முறைகேடு தொடர்பாக தமிழகத்தில் 25-க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

தமிழகத்தில் ஆற்று மணல் விற்பனையை அரசே தமிழ்நாடு நீர்வளத்துறை மூலம் விற்பனை செய்து வருகிறது. ஆன்லைன் மூலம் விற்பனை மேற்கொள்ளப்படுகிறது. ஆன்லைனில் மணல் வாங்குபவர்களுக்கு தமிழக அரசு சார்பில் இ-ரசீது வழங்கப்படுகிறது. இவ்வாறு விற்கப்படும் மணல் மூலம் கிடைக்கும் வருவாய்க்கு உரிய வரிசெலுத்தப்படுகிறதா என்பது குறித்து அமலாக்கத்துறை ஆய்வு மேற்கொள்வதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

மேலும், கணக்கில் வராமல் பெருமளவில் மணல் அள்ளப்பட்டு சட்டவிரோதமாக ஆஃப்லைனிலும் விற்பனை நடப்பதாக சந்தேகிக்கும் அமலாக்கத்துறை, மணல் விற்பனையில் பணமோசடி மற்றும் வரி ஏய்ப்பு நடந்திருக்கிறதா என்பது குறித்து ஆய்வு செய்து வருகிறது.

பல்வேறு குழுக்களாக பிரிந்துள்ள அமலாக்கத்துறை அதிகாரிகள், தமிழகத்தின் வேலூர், திருச்சி, கரூர், புதுக்கோட்டை உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட இடங்களில் திடீர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். மணல் அள்ளும் மையங்கள், மணல் விற்பனை செய்யப்படும் இடங்கள், மணல் விற்பனையில் ஈடுபட்டுள்ள ஒப்பந்ததாரர்களின் வீடுகள், அலுவலகங்கள் ஆகிய இடங்களில் இந்த சோதனை நடந்தது.

துணை ராணுவப்படையின் பாதுகாப்புடன் அமலாக்கத்துறை அதிகாரிகள் இந்த சோதனையை மேற்கொண்டனர். அவர்கள் தமிழக காவல்துறையின் பாதுகாப்பைக் கோரவில்லை என தெரிகிறது. அதேநேரத்தில், தமிழகத்தில் 25க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை சோதனை நடத்துவது குறித்த தகவல் மட்டும் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



புதுக்கோட்டை ஜெசிஐ சென்ட்ரல் சார்பாக தைலா நகரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் மரக்கன்றுகள் நடப்பட்டது. இந்த நிகழ்வில் மரம் அறக்கட்டளை ராஜா மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்வை தலைவர் கஜேந்திரன் தொடங்கி வைத்தார். இதில் உறுப்பினர்கள் சாலை முத்துக்குமார், ரமேஷ்,தர்மராஜ்,சிங்காரம், ஸ்ரீனிவாசன்,வினோத் ஆகியோர் கலந்துகொண்டார்கள். ஜூனியர் தலைவர் பள்ளி மாணவன் பர்வேஷ் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர்.



தென்காசி மாவட்டம் இலஞ்சி, சாம்பவர் வடகரையில் முன்னாள் காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான, தியாகி இமானுவேல் சேகரனின் 66-வது குருபூஜை நிகழ்வையொட்டி தமிழ்நாடு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக தென்காசி மருத்துவர்கே. பி. சங்கர குமார் தலைமையில் 2000 கிராம பொது மக்களுக்கு அறுசுவை விருந்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தென்காசிமாவட்ட பொதுச் செயலாளர்கள் மாடசாமி ஐ என் டி சி யு, முகமது ரபீக், மாவட்ட அமைப்பு செயலாளர் முத்தையா எஸ்.ஆர். ரமேஷ் கடையநல்லூர் தொகுதி இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர் மற்றும் இலஞ்சி, சாம்பவர் வடகரை பொதுமக்கள் அன்னதான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய உறுப்பினராக மதுரை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் பிஎஸ்என்எல் செல்வத்தை நியமனம் செய்த தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கும் தொழிலாளர் நலவாரிய மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் கணேசனுக்கும் பரிந்துரை செய்த தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மணிமாறனை சந்தித்து சால்வை அணிவித்து நியமன ஆணையை வழங்கி வாழ்த்து பெற்றார், இதில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கிருத்திகா தங்கப்பாண்டி ஒன்றியச் செயலாளர் பாண்டியன், தங்கபாண்டியன் மற்றும் ஒன்றிய மாணவரணி அணி அமைப்பாளர்கள் உடன் இருந்தனர்.

# திருநாவலூர் அரசு பள்ளியில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா



கள்ளக்குறிச்சி, செப்,13_

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருநாவலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது

விழாவிற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் இளங்கோதை தலைமை தாங்கினார், சிறப்பு அழைப்பாளராக உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மணிக்கண்ணன் கலந்துகொண்டு பள்ளி மாணவர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி, மாணவர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வின் போது திருநாவலூர்ஒன்றியக்குழு பெருந்தலைவர் சாந்தி இளங்கோவன்,பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் ரமேஷ் மாவட்ட குழு உறுப்பினர் சந்திரசேகரன், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் பத்மநாபன், பள்ளி மேலாண்மை குழு கபாகாந்தி, திருநாவலூர் ஊராட்சிமன்றத்தலைவர் அலமேலு காசிநாதன், சேந்தமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் உமா சந்திரகாசன் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள், இருபால் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் காங்கிரஸ் கட்சியின் தெற்கு மாவட்டத் தலைவர் ராம. சுப்புராம் அவருடைய புதல்வன் கணேஷ் பிரவுக்கு நேற்று பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது, நெய்வாசல் ஒன்றிய கவுன்சிலரும் இளைஞர் காங்கிரஸ் தலைவருமான கணேஷ் சுப்புராம் பிறந்தநாள் விழா திருமயம் நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் தெற்கு வட்டாரத் தலைவர் மணிகண்டன் முன்னாள் வட்டாரத் தலைவர் பழனிச்சாமி வாசகர் வட்ட நிர்வாகி சீமானூர் மீனாட்சி சுந்தரம் திமுக ஒன்றிய செயலாளர் ஆறு சிதம்பரம் மாநில சிறுபான்மை பிரிவு பொறுப்பாளர் அக்பர் அலி நகரத் தலைவர் அன்பு மற்றும் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் வட்டார நகர நிர்வாகிகள் விழாவில் கலந்து கொண்டு கேக் வெட்டி கணேஷ் பிரபுவுக்கு அனைவரும் சால்வை அணிவித்தனர் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் கணேஷ் பிரபு நன்றி தெரிவித்தார்.

## கீரமங்கலம் பேரூராட்சியில் 353 மாணவ, மாணவிகளுக்கு

# விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்



ஆலங்குடி , செப்.13-

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை,சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று வழங்கினார். பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் மாணவ, மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கரைகொண்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் மாணவ, மாணவிகள் பள்ளிக்கு உரிய நேரத்திற்கு சென்றுவரும் வகையில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி வருகிறார்கள். அதன்படி இன்றையதினம் கீரமங்கலம் பேரூராட்சியில் 353 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது. அதன்படி கீரமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 148 மாணவர்களுக்கும், கீரமங்கலம்; அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 205 மாணவிகளுக்கும் என ஆகமொத்தம் 353 மாணவ, மாணவிகளுக்கு ரூ.17,01,000 மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

எனவே மாணவ, மாணவிகள் அனைவரும் தமிழக அரசால் வழங்கப்படும் இத்தகைய மிதிவண்டிகளை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் பள்ளிக்கு சரியான நேரத்திற்குள் சென்றுவருவதுடன், உடற்பயிற்சியாகவும் அமைகிறதுஎனதெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், திருவரங்குளம் ஒன்றியக் குழுத் தலைவர் வள்ளியம்மை தங்கமணி, கீரமங்கலம் பேரூராட்சித் தலைவர் சிவக்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் நல்லாசிரியர் விருது பெற்ற கணித ஆசிரியருக்கு பாராட்டு

*அரியலூர், செப்.13-*

*நல்லாசிரியர் விருது பெற்றசோழன் குடிக்காடு அரசு உயர்நிலைப் பள்ளி கணித ஆசிரியர் சால்வை அணிவித்து பாராட்ட பெற்றார்.*



*அரியலூர் மாவட்டம் சோழன் குடிக் காடு அரசு உயர் நிலைப் பள்ளியில், கணித பட்டதாரி ஆசிரியராக சிறப்பாக பணியாற்றிவரும் சுகுணா பாண்டியன், தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றுள்ளார்.*

*அவரை பள்ளிக்கு சென்று, உலகத் திருவள்ளுவர் ஞான மன்றம் சார்பில், அதன் நிறுவனரும், ஓய்வு பெற்ற தலைமையாசிரியருமான அசாவீரன் குடிக்காடு இராவணன், சால்வை அணிவித்து பாராட்டினார். பணி நிறைவுபெற்ற கூட்டுறவுச் சங்கம் செயலர் மணிவண்ணன் உடன் இருந்தார்.*

# வள்ளலார் 200வது ஆண்டை முன்னிட்டு அரியலூர் பெருமாள் கோயிலில் அன்னதானம்

*அரியலூர் செப் 13*



*வடலூர் வள்ளலார் ராமலிங்கரின், 200 வது ஆண்டு அவதார தினத்தை முன்னிட்டு, அரியலூர் பெருமாள் கோவிலில், அகவல் பாராயணம் மற்றும் அன்னதானம் நடைபெற்றது.*

*இது பற்றி அரியலூர் ஆலந்துரையார் கோதண்ட ராமசாமி திருக்கோயில் நிர்வாக அலுவலர் சரவணன் வெளியிட்ட செய்தி குறிப்பு:*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் ஆணைக்கிணங்க, இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் வழிகாட்டுதலின்படி, வள்ளலாரின் 200 வது வருவிக்க உற்ற ஆண்டை முன்னிட்டு, இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில், தொடர் அன்னதானம் நடைபெற்று வருகிறது.*

*அதையொட்டி கடலூர் மண்டலத்துக்குட்பட்ட, அரியலூர் மாவட்டம், அரியலூர் நகர் அருள்மிகு கோதண்ட ராமசாமி திருக்கோயிலில், இரு தினங்களில், தொடர் அன்னதானத் திட்டம் நடைபெற்றது. இதில் வள்ளலாரின், சைவ சுத்த சன்மார்க்க அடியார்கள், வள்ளலாரின் புகழைப் பரப்பும் பொருட்டு, அகவல் பாராயணம் பாடப்பட்டு துவங்கப்பட்டது, இதில் அரியலூர் உதவி ஆணையர் நாகராஜ் கலந்து கொண்டார், அதைத்தொடர்ந்து 150 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது,இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.*

# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி மாணவர்களுக்கு மனநல மேம்பாட்டுப் பயிற்சி

புதுக்கோட்டை, செப்.13-



புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளியில்

மாவட்டத்திலேயே முதன்முறையாக உளவியல் ஆலோசனைக்கென்று தனி ஆசிரியரை நியமித்ததோடு ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தொடர்ந்து மனநல மேம்பாட்டு பயிற்சி வழங்கி வரும் பள்ளியாக ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி செயல்பட்டுவருகிறது.

அதன் தொடர்ச்சியாக பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு தன்னம்பிக்கை பயிற்சி மற்றும் மனநல மேம்பாட்டுப் பயிற்சி நடைபெற்றது. நிகழ்வுக்கு பள்ளி முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி தலைமை தாங்கினார், இந்நிகழ்வில் மாவட்ட மனநலத் திட்ட அலுவலர் மருத்துவர் கார்த்திக் தெய்வநாயகம் மாணவர்களிடம் தேர்வுகளை எதிர்க்கொள்ளும் முறை பற்றியும் தற்போதுள்ள காலச்சூழலில் சமூக வலைதளங்களில் மாணவர்கள் எதிர்கொள்ளும் மனச்சிக்கல்களை தீர்ப்பது குறித்தும் கலந்துரையாடினார்.

மனநலம் சார்ந்த மாணவர்களின் பல கேள்விகளுக்கு மருத்துவர் கார்த்திக் தெய்வநாயகம் தெளிவான விளக்கம் அளித்தார். மாணவர்களுக்கு எளிதான பல பயிற்சிகள் வழங்கப்பட்டன, மாணவர்கள் உற்சாகமாக பயிற்சியில் பங்கேற்றனர், இந்த நிகழ்ச்சியில் ஆசிரியர் கணியன் செல்வராஜ் வரவேற்க,துணைமுதல்வர் குமாரவேல் நன்றி கூறினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# இது மக்களின் கற்பனைக்கு அப்பாற்பட்டது பிசிசிஐ துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா பேச்சு




கொழும்பு : செப். 13,
பாகிஸ்தானுக்கு எதிரான சூப்பர் 4 சுற்று ஆட்டத்தில் இந்திய அணி 228 ரன்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றியை பெற்றது.

16-வது ஆசிய கோப்பை கிரிக்கெட்டில் தற்போது சூப்பர்4 சுற்று ஆட்டங்கள் இலங்கை தலைநகர் கொழும்பில் உள்ள பிரேமதாசா ஸ்டேடியத்தில் நடந்து வருகின்றன. சூப்பர் 4 சுற்றுக்கு தகுதி கண்டுள்ள இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் அணிகள் தங்களுக்குள் தலா ஒருமுறை மோத வேண்டும். இதன் முடிவில் டாப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும்.

இந்த தொடரின் சூப்பர் 4 சுற்றில் ஞாயிற்றுக்கிழமை இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் இந்திய அணி 24.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 147 ரன்கள் எடுத்து இருந்த போது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. இந்த ஆட்டத்துக்கு மாற்று நாள் (ரிசர்வ் டே) ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்ததால் பாதியில் நின்று போன ஆட்டம் நேற்று முன்தினம் திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில் தொடர்ந்து பேட்டிங் ஆடிய இந்திய அணி 50 ஓவர்களில் 2 விக்கெட்டை மட்டும் இழந்து 356 ரன்கள் குவித்தது. கோலி 122 ரன், ராகுல் 111 ரன் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர். இதையடுத்து 357 ரன் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் ஆடிய பாகிஸ்தான் அணி 32 ஓவர்களில் 128 ரன்னில் அடங்கியது. ஹாரிஸ் ரவுப், நசீம் ஷா காயத்தால் பேட் செய்யவில்லை. இதன் மூலம் இந்தியா 228 ரன்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றியை பெற்றது. குல்தீப் யாதவ் 5 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தினார். இந்நிலையில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான வெற்றி குறித்து பிசிசிஐ துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா பேசுகையில், விராட் கோலியும், கே.எல். ராகுலும் இணைந்து இந்திய அணி ஒரு பெரிய ஸ்கோரை குவிக்க உதவினர். இருவரும் சதம் அடித்ததன் மூலம் இந்தியா 2 விக்கெட்டுகள் இழப்பிற்கு 356 ரன்கள் என்று ஒரு பெரிய ஸ்கோரை உருவாக்கியது. அவர்கள் விளையாடிய விதம் மக்களின் கற்பனைக்கு அப்பாற்பட்டது என்று கூறியுள்ளார். மேலும் இந்த ஆட்டத்தில் இந்திய வீரர் விராட் கோலி சர்வதேச கிரிக்கெட்டில் 13 ஆயிரம் ரன்களை அதிவேகமாக எடுத்த வீரர் என்ற புதிய சாதனையையும் தனதாக்கினார். இதற்கு முன்பு இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சச்சின் தெண்டுல்கர் தனது 330-வது ஆட்டத்தில் 13 ஆயிரம் ரன்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது. ஆனால் கோலி 278 ஆட்டங்களிலேயே அந்த மைல்கல்லை அடைந்து தெண்டுல்கரை பின்னுக்கு தள்ளிவிட்டார். இது குறித்து அவர் பேசுகையில், விராட் கோலி சர்வதேச கிரிக்கெட்டில் அதிவேகமாக 13000 ரன்களை அடித்து, சச்சின் தெண்டுல்கரின் சாதனையை முறியடித்துள்ளார். இது மிகப்பெரிய சாதனையாகும். இது எங்களுக்கு கிடைத்த பெரிய வெற்றி, இந்திய அணிக்கு வாழ்த்துகள் என்று பிசிசிஐ துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா பாராட்டியுள்ளார்.

# யுஎஸ் ஓபன் டென்னிஸ் ஜோகோவிச் சாம்பியன்

## 24வது கிராண்ட் ஸ்லாம் பட்டம்



நியூயார்க் : செப். 13,
யுஎஸ் ஓபன் டென்னிஸ் - ஜோகோவிச் சாம்பியன் 24வது கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றார்.

யுஎஸ் ஓபன் டென்னிஸ் தொடரில் 4வது முறையாக சாம்பியன் பட்டம் வென்ற செர்பிய நட்சத்திரம் நோவாக் ஜோகோவிச், 24 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களுடன் மார்கரெட் கோர்ட் சாதனையை சமன் செய்து அசத்தினார்.

பரபரப்பான இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் டானில் மெத்வதேவுடன் (27 வயது, 3வது ரேங்க்) மோதிய ஜோகோவிச் (36 வயது, 2வது ரேங்க்) 6-3, 7-6 (7-5), 6-3 என்ற நேர் செட்களில் வென்று யுஎஸ் ஓபன் கோப்பையை 4வது முறையாக கைப்பற்றினார்.

இப்போட்டி 3 மணி, 16 நிமிடத்தில் முடிவுக்கு வந்தது. இந்த வெற்றி மூலம், ஆஸி. வீராங்கனை மார்கரெட் கோர்ட் 24 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்று படைத்த சாதனையை ஜோகோவிச் சமன் செய்துள்ளார். ஆண்கள் பிரிவில் அவர் ஏற்கனவே முதலிடம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் (22 பட்டங்கள்), சுவிஸ் நட்சத்திரம் ரோஜர் பெடரர் (20) அடுத்த இடங்களில் உள்ளனர். ஒரு சீசனில் 3 கிராண்ட் ஸ்லாம் பட்டம் வெல்லும் சாதனையை 4 முறை நிகழ்த்திய (2011, 2015, 2021, 2023) முதல் வீரர் என்ற பெருமையும் ஜோகோவிச்சுக்கு கிடைத்துள்ளது.

10 முறை யுஎஸ் ஓபன் பைனலில் விளையாடி உள்ள அவர், அதில் 4 முறை கோப்பை வென்று அசத்தியுள்ளார். மகளிர் இரட்டையர் பிரிவு பைனலில் ஜெர்மனியின் லாரா சீஜ்மண்ட் வேரா ஸ்வோனரேவா (ரஷ்யா) ஜோடியுடன் மோதிய எரின் ரவுட்லிப் (நியூசி.) கேப்ரியலா டப்ரோவ்ஸ்கி (கனடா) இணை 7-6 (11-9), 6-3 என்ற நேர் செட்களில் வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. விறுவிறுப்பான இப்போட்டி 2 மணி, 14 நிமிடங்களுக்கு நீடித்தது.

# விளையாட்டு செய்திகள்

## அமெரிக்காவில் ரசிகருடன் தோனி வைரலாகும் வீடியோ






வாஷிங்டன் : செப். 13,
அமெரிக்காவில் ரசிகருடன் தோனி பேசிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டனான மகேந்திர சிங் தோனி, தற்போது அமெரிக்காவில் தனது நேரத்தை செலவிட்டு வருகிறார். அவர் சமீபத்தில் அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் கார்லோஸ் அல்கராஸ் மற்றும் ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரெவ் ஆகியோருக்கு இடையிலான ஆண்கள் ஒற்றையர் காலிறுதி ஆட்டத்தை நேரில் கண்டு களித்தார்.

பின்னர், தோனி அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் உடன் கோல்ப் விளையாடும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. இந்நிலையில், அமெரிக்காவில் தனது ரசிகரை தோனி சந்திக்கும் கலகல வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அதில், தோனி அந்த ரசிகருக்கு சிறிய பேட்டில் ஆட்டோகிராப் போட்டு கொடுப்பதும், அவருடன் புகைப்படங்களுக்கு போஸ் கொடுப்பதும், ஆட்டோகிராப் கொடுத்த பிறகு ரசிகரிடம் நகைச்சுவையாக சாக்லேட் கேட்பது போன்ற காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

## உலக கோப்பை கிரிக்கெட் நியூசிலாந்து அணி அறிவிப்பு : கேன் மீண்டும் கேப்டன்




வெலிங்டன் : செப். 13,
ஐசிசி உலக கோப்பை ஒருநாள் போட்டித் தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

காயத்தால் அவதிப்பட்டு வந்த கேன் வில்லியம்சன் மீண்டும் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் ஐசிசி உலக கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டி இந்தியாவில் அக்.5 நவ.19 வரை நடைபெற உள்ளது. இந்த தொடருக்கான நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் திங்கள்கிழமை அறிவிக்கப்பட்டது. காயம் காரணமாக அவதிப்பட்டு வந்த கேன் வில்லியம்சன் மீண்டும் தலைமை பொறுப்பேற்கிறார்.

2019 உலககோப்பையில் விளையாடிய 10 அணிகளின் கேப்டன்களில் 9 பேர் மாற்றப்பட்டுவிட்ட நிலையில், 2023 தொடரில் வில்லியம்சன் மட்டுமே கேப்டனாக நீடிப்பது குறிப்பிடத்தக்கது. இந்திய களத்தை கருத்தில் கொண்டு ஈஷ் சோதி, மிட்செல் சான்ட்னர், ஆல் ரவுண்டர் ஜிம்மி நீஷம் என 3 சுழற்பந்து வீச்சாளர்கள் அணியில் இடம் பெற்றுள்ளனர். பெரும் எதிர்பார்ப்புடன் கிரிக்கெட் நியூசிலாந்து 15 பேர் கொண்ட அணியை உலக கோப்பைக்காக அறிவித்துள்ளது. வில்லியம்சன் அணியுடன் இணையும் வரை, துணை கேப்டன் டாம் லாதம் அணியை வழிநடத்துவார்.

அணி விவரம்: கேன் வில்லியம்சன் (கேப்டன்), டிரென்ட் போல்ட், மார்க் சாப்மேன், டெவன் கான்வே, லோக்கி பெர்குசன், மேட் ஹென்றி, டாம் லாதம் (துணை கேப்டன்/ விக்கெட் கீப்பர்), டேரில் மிட்செல், ஜிம்மி நீஷம், கிளென் பிலிப்ஸ், ரச்சின் ரவீந்திரா, மிட்செல் சான்ட்னர், ஈஷ் சோதி, டிம் சவுத்தீ, வில்லியம் யங்.

# ஆட்ட நாயகன் விராட் கோலி அல்ல.. மீண்டும் வன்மத்தை கக்கிய கம்பீர்



செப். 13,
ஆசிய கோப்பை 2023 கிரிக்கெட் தொடரில் மழைக்கு மத்தியில் நடைபெற்று முடிந்த முக்கியமான சூப்பர் 4 போட்டியில் பாகிஸ்தானை 228 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா வீழ்த்தியது.

இந்த போட்டியில் ஆட்டநாயகனாக விராட் கோலி தேர்வு செய்யப்பட்டார். இந்நிலையில் இந்த போட்டியில் விராட் கோலியை விட குல்தீப் யாதவ் தான் ஆட்டநாயகன் என்று கவுதம் கம்பீர் விமர்சித்துள்ளார். இது குறித்து அவர் பேசியது : என்னை பொறுத்த வரை குல்தீப் யாதவ் ஆட்டநாயகன். மேலும் விராட் கோலி மற்றும் கேஎல் ராகுல் ஆகியோர் சதமும் ரோகித் சர்மா மற்றும் கில் ஆகியோர் நல்ல ரன்களும் அடித்தார்கள் என்பது எனக்கு தெரியும். ஆனால் ஸ்விங் மற்றும் வேகத்துக்கு சாதகமான இது போன்ற மைதானங்களில் 8 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் எடுப்பது கடினமாகும். அதிலும் குறிப்பாக சுழலை சிறப்பாக எதிர்கொள்ளக்கூடிய பாகிஸ்தான் பேட்ஸ்மேன்களுக்கு எதிராக அவர் வீசிய பவுலிங் தான் வெற்றியை மாற்றியது.

அது தான் அவர் எந்தளவுக்கு தரமான பவுலர் என்பதையும் காட்டுகிறது. குறிப்பாக அவர் பாகிஸ்தான் பேட்ஸ்மேன்களுக்கு காற்றில் சுழல வைத்து பெரிய சவாலை கொடுத்தார். அது உலகக் கோப்பையில் இந்தியாவுக்கு மிகப்பெரிய நல்ல அம்சமாகும். ஏனெனில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு நிகராக போட்டியின் எந்த சூழ்நிலையிலும் விக்கெட் எடுக்கும் திறமை அவரிடமும் இருக்கிறது என்று கம்பீர் கூறினார்.

# சினிமா செய்திகள்

## இசை நிகழ்ச்சி குளறுபடி ஏ.ஆர்.ரகுமானுக்கு நடிகர் கார்த்தி ஆதரவு



சென்னை : செப். 13,
நடந்த குளறுபடிகளுக்கு ஏ.ஆர்.ரகுமான் எந்த வகையிலும் பொறுப்பல்ல, அவரை வெறுக்க வேண்டாம் என்று நடிகர் கார்த்தி தெரிவித்துள்ளார்.

தமிழ் திரையுலகின் முன்னணி இசையமைப்பாளரான ஏ.ஆர்.ரகுமானின் 'மறக்குமா நெஞ்சம்' இசை நிகழ்ச்சி செப்டம்பர் 10-ஆம் தேதி சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் நடைபெற்றது. 25 ஆயிரம் பேர் கலந்து கொள்ளும் இந்த நிகழ்ச்சியில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதால் தள்ளு முள்ளு ஏற்பட்டது. அதுமட்டுமல்லாமல் அடிப்படை வசதி எதுவும் இல்லாமல் ரசிகர்கள் சிரமப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சி சமூக வலைதளத்தில் பேசுபொருளாகியுள்ளது. ரசிகர்கள் பலர் இந்த மாதிரியான ஒரு நிகழ்ச்சி நடக்காமலேயே இருந்திருக்கலாம். இந்த நிகழ்ச்சி மிகப்பெரிய ஸ்கேம் என்று சர்ச்சையான கருத்துகளை பதிவிட்டு வந்தனர். அதுமட்டுமல்லாமல் பலரும் ஏ.ஆர். ரகுமானுக்கு எதிராக பல விமர்சனங்களை அடுக்கி வருகின்றனர்.

இந்நிலையில், நடிகர் கார்த்தி, இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானுக்கு ஆதரவு தெரிவித்து பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், நாம் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஏ.ஆர்.ரகுமான் மீது அன்பு செலுத்தி வருகிறோம். இசை நிகழ்ச்சியின் போது நடந்தது தற்செயலானது. இதனால் ஏ.ஆர்.ரகுமான் பாதிக்கப்பட்டிருப்பார். இந்த குழப்பங்களுக்கு மத்தியில் என் குடும்பமும் அந்த நிகழ்ச்சியில் இருந்தது, ஆனால் நான் ஏ.ஆர். ரகுமானுக்கு ஆதரவாக நிற்கிறேன். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பொறுப்பேற்பார்கள் என்று நம்புகிறேன். நம் அனைவர் மீதும் ஏ.ஆர்.ரகுமான் அன்பு செலுத்துவது போன்று ரசிகர்களும் வெறுப்பை தவிர்த்து அன்பை தேர்ந்தெடுங்கள் என்று தெரிவித்துள்ளார்.

## விஜய் ஆண்டனி நடித்துள்ள 'ரத்தம்' திரைப்படம் அக்டோபர் 6-ம் தேதி வெளியாகும் படக்குழு அறிவிப்பு




சென்னை : செப். 13,
விஜய் ஆண்டனி நடித்துள்ள 'ரத்தம்' திரைப்படம் அக்டோபர் 6-ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நடிகர் சிவா நடிப்பில் வெளியான 'தமிழ்படம்' திரைப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் சி.எஸ். அமுதன். இவர் மின்னலே, அனேகன் உள்ளிட்ட திரைப்படங்களில் பாடல்களும் எழுதியுள்ளார். இவரது இயக்கத்தில் அடுத்ததாக உருவாகியுள்ள படம் 'ரத்தம்'.

இந்த படத்தில் விஜய் ஆண்டனி, மகிமா நம்பியார், ரம்யா நம்பீசன், நந்திதா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இதையடுத்து, இந்த படத்தின் டிரைலர் தற்போது வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் சி.அஸ். அமுதன் இயக்கத்தில் விஜய் ஆண்டனி நடித்துள்ள 'ரத்தம்' திரைப்படம், அக்டோபர் 6ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இதனால் விஜய் ஆண்டனி ரசிகர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## 10 ஆண்டுகளுக்கு பிறகு செல்வராகவனுக்கு ஓகே சொன்ன திரிஷா எதற்கு தெரியுமா?



சென்னை : செப். 13,
கடந்த 2007-ஆம் ஆண்டு இயக்குனர் செல்வராகவன் இயக்கத்தில் 'ஆடவாரி மாடலருக்கு அர்தாலே வேறுலே' திரைப்படம் வெளியானது.

இப்படத்தில் திரிஷா மற்று வெங்கடேஷ் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர். இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இதைத்தொடர்ந்து கடந்த 2008-ஆம் ஆண்டு இப்படம் தமிழில் 'யாரடி நீ மோகினி' என்ற பெயரில் ரீமேக் செய்யப்பட்டது. இதில், தனுஷ், நயன்தாரா, ரகுவரன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர். இதுவும் பெரும் வரவேற்பை பெற்றது.

இதனிடையே, கடந்த 2013-ம் ஆண்டு செல்வராகவன் தனது சமூக வலைதளப் பக்கத்தில், 'நீண்ட நாட்களுக்கு பின்னர் 'ஆடவாரி மாடலருக்கு அர்தாலே வேறுலே' திரைப்படத்தைப் பார்த்தேன். வெங்கடேஷ் மற்றும் த்ரிஷாவுடன் பணியாற்றியதில் மகிழ்ச்சி. இரண்டாம் பாகம் எடுக்கவும் தயார்' என்று பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில், 10 ஆண்டுகளுக்கு பின்னர் இயக்குனர் செல்வராகவனின் ட்வீட்டுக்கு நடிகை த்ரிஷா 'நான் ரெடி' என பதிலளித்துள்ளார். இந்த பதிவு தற்போது இணையத்தில் ட்ரெண்டாகி வருகிறது.

## விஷாலுக்கு அடித்துள்ள ஜாக்பாட்! மார்க் ஆண்டனி படம் பயன்படுத்துமா



சென்னை : செப். 13,
இந்த வாரம் தமிழில் இருந்து விஷாலின் 'மார்க் ஆண்டனி' படம் மட்டும் சோலோ ரிலீசாக வெளியாகிறது.

ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் விஷால், எஸ். ஜே.சூர்யா நடித்துள்ள 'மார்க் ஆண்டனி' படம் செப்டம்பர் 15ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டது. சில சட்டப் பிரச்னைகள் வந்த போதும் அதையும் தாண்டி, படம் வெளியாக இருந்த தடைகள் நீங்கி, சொன்னபடி 15ம் தேதி வெளியாகவுள்ளது.

சென்ற வாரம் இந்திப் படமான 'ஜவான்', தெலுங்கு 'மிஸ் ஷெட்டி மிஸ்டர் போலிஷெட்டி' போன்ற படங்கள் வெளியானாலும் தமிழில் எந்தப் படமும் வெளியாகவில்லை. இந்த வாரம் விநாயகர் சதுர்த்தி விடுமுறை வருவதால் அதைக் குறி வைத்து விஷாலின் 'மார்க் ஆண்டனி'யும், ராகவா லாரன்ஸின் 'சந்திரமுகி 2' படமும் வெளியாவதாக இருந்தது. ஆனால் VFX பணிகள் நிறைவடையாததால் 'சந்திரமுகி 2' செப்டம்பர் 28ம் தேதிக்கு தள்ளிப் போகிறது என படக்குழு அறிவித்தது.

எனவே இந்த வாரம் தமிழில் இருந்து விஷாலின் 'மார்க் ஆண்டனி' படம் மட்டும் சோலோ ரிலீசாக வெளியாகிறது. வெள்ளிக்கிழமை படம் வெளியாகிறது, வார இறுதியான சனி, ஞாயிறு மேலும் விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு செப் 18 விடுமுறை என மிகச் சிறப்பான நேரத்தில் வெளியாகவுள்ளது. இதில் இன்னும் ஒரு வசதியாக செப் 28 வரை வேறு எந்த பெரிய தமிழ்ப் படங்களும் வெளியிடப்படுவதாக தற்போது வரை அறிவிக்கப்படவில்லை. ஆகவே 'மார்க் ஆண்டனி' மட்டும் ரசிகர்களிடம் வரவேற்பு பெரும் பட்சத்தில், படம் மிகப்பெரிய வசூலை குவிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# உலக செய்திகள்

## இந்தியாவிற்கான எதிர்கால திட்டங்களை வகுக்கும் ராகுல் எரிக் சொல்ஹெய்ம் கருத்து

நார்வே : செப். 13,

வட ஐரோப்பாவில் உள்ள பனிமலைகள் அதிகம் கொண்ட சுற்றுலாவிற்கு புகழ்பெற்ற நாடு, நார்வே. இதன் தலைநகரம் ஓஸ்லோ.

இந்நாட்டின்முன்னாள் அரசியல்வாதியும், ராஜதந்திரியுமான 68 வயதான எரிக் சொல்ஹெய்ம், முன்னாள் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டங்களின் செயல் இயக்குனராக பதவி வகித்தவர். இவர், பருவநிலையின் மாற்றங்கள் மற்றும் அதனால் ஏற்படும் தாக்கங்கள் குறித்து உலக நாடுகள் செயலாற்ற வேண்டியது குறித்து தனது கருத்துக்களை உலகெங்கும் கூறி வருகிறார். கடந்த ஜூன் மாதம், இந்தியாவின் அதிக மக்கள் தொகையின் காரணமாக இயற்கை வளங்களை அளவுக்கதிகமாக பயன்படுத்த நேரிடும் என்றும் இதனால் இந்தியாவில் காடுகள் அழியும் நிலை அதிகரிக்கலாம் எனவும் எச்சரித்திருந்தார்.



இந்நிலையில், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி, நேற்று முன்தினம் திங்கள்கிழமை தனது ஐரோப்பிய சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக நார்வே சென்றார். இது குறித்து காங்கிரஸ் கட்சியின் அதிகாரப்பூர்வ எக்ஸ் கணக்கில் அக்கட்சி தெரிவித்துள்ளதாவது. ராகுல் காந்தி, நார்வே நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களான எர்னா ஸோல்பர்க் மற்றும் ஸ்வெர் மிர்லி ஆகியோருடன் நார்வே நாட்டின் முன்னாள் பிரதமர் ஆகியோரையும் சந்தித்தார். அந்த சந்திப்பு ஆக்கபூர்வமாக இருந்தது. இவ்வாறு அக்கட்சி தெரிவித்திருந்தது. நார்வே சென்ற ராகுல், எரிக் சொல்ஹெய்மையும் அங்கு சந்தித்தார்.

இது குறித்து எரிக் சொல்ஹெய்ம் தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் கணக்கில் பதிவு செய்திருப்பதாவது : நவீன இந்தியாவில் முதலீடு செய்ய விரும்பும் முன்னணி வணிக தலைவர்களுடன் ஒரு சிறப்பான சந்திப்பு நடந்தது. இதில் இந்தியாவின் முக்கிய எதிர்கட்சியான காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல், இந்தியாவிற்கான தனது எதிர்கால திட்டங்கள் குறித்தும், அடுத்த வருடம் அந்நாட்டில் நடைபெறவிருக்கும் தேர்தல் பின்னணியில் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தும் அவரது கருத்துக்களை வெளியிட்டதாக எரிக் கூறினார்.

## லிபியாவை பந்தாடிய புயல்–வெள்ளம் 2 ஆயிரம் பேர் பலி

லிபியா-திரிபோலி : செப். 13,

வட ஆப்பிரிக்க நாடான லிபியா, மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ளது.

இந்நிலையில் மத்திய தரைக்கடலில் உருவான ’டேனியல்’ என்று பெயரிடப்பட்ட சூறாவளி புயல், லிபியாவில் கிழக்கு பகுதியை கடுமையாக தாக்கியது. அங்குள்ள கடற்கரை நகரங்களில் சூறாவளி காற்றுடன் கனமழை கொட்டியது. இதனால் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஊருக்குள் வெள்ளம் புகுந்து ஏராளமான வீடுகள் தண்ணீரில் மூழ்கின. வீடு, வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துசெல்லப்பட்டன. டெர்னா, சூசா, பாய்தா, ஷாஹத், மார்ஜ் உள்ளிட்ட நகரங்களில் புயலின் தாக்கம் கடுமையாக உள்ளது. குறிப்பாக டெர்னா நகரில் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. அந்த நகரம் பேரழிவு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் லிபியா கிழக்கு பகுதியில் புயல், கனமழை, வெள்ளத்தில் சிக்கி 2 ஆயிரம் பேர் பலியாகி உள்ளதாக பிரதமர் ஒசாமா ஹமாட் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறும்போது, "டெர்னா நகரில் 2 ஆயிரம் பேர் இறந்துவிட்டதாக அஞ்சப்படுகிறது. ஆயிரக்கணக்கானோரை காணவில்லை" என்றார். மேலும் ஆயுதப்படைகளின் செய்தித்தொடர்பாளர் அஷ்மத் அல்-மோஸ்மரி கூறும்போது, "5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் பேர் வரை காணாமல் போய் உள்ளனர்" என்று கூறினார். கனமழை காரணமாக இரண்டு அணைகள் நிரம்பி இடிந்து விழுந்துள்ளது. இதனால் திடீரென்று வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நகரங்களுக்குள் தண்ணீர் புகுந்தது. இதில் ஏராளமான வீடுகள் தண்ணீரில் மூழ்கின. பலர் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டனர். இதனால் அதிகளவில் உயிரிழப்பு ஏற்பட்டது. மேலும் பலர் மாயமாகி உள்ளதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் பேரிடர் மீட்பு குழுவினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்கிறார்கள். பல கடலோர நகரங்களில் பெரும் பகுதிகள் அழிந்துள்ளன. இந்த பேரழிவு காரணமாக 3 நாட்கள் துக்கம் அனுசரித்து நாடு முழுவதும் தேசிய கொடியை அரை கம்பத்தில் பறக்கவிட அரசு உத்தரவிட்டுள்ளது. உள்நாட்டு போர் நடந்து வரும் லிபியாவில் கிழக்கு பகுதியை கிளர்ச்சியாளர்களும், மேற்கு பகுதியை வெளிநாட்டு ஆதரவு பெற்ற அரசும் நிர்வகித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## 70–வது பிறந்த நாளில் அதிர்ஷ்டம்

## இங்கிலாந்து மூதாட்டிக்கு லாட்டரியில் விழுந்த மெகா பம்பர் பரிசு



பிரிட்டன் : செப். 13,

லாட்டரி எடுக்கும் எல்லோருக்குமே அதிர்ஷ்டம் கிடைப்பதில்லை. ஒருசிலருக்கு மட்டுமே எதிர்பாராத பம்பர் பரிசுகள் கிடைக்கும்.

அந்த வகையில் இங்கிலாந்தை சேர்ந்த 70 வயது மூதாட்டி ஒருவருக்கு லாட்டரியில் மெகா பம்பர் பரிசு கிடைத்துள்ளது. இங்கிலாந்தில் உள்ள டோர்கிங் பகுதியை சேர்ந்தவர் டோரிஸ் ஸ்டான்பிரிட்ஜ் என்ற பெண் தனது 70-வது பிறந்த நாளையொட்டி நேஷனல் லாட்டரியில் பரிசுசீட்டு வாங்கி கொண்டாடியுள்ளார். அவருக்கு அந்த லாட்டரி சீட்டில் மெகா பம்பர் பரிசாக ஒவ்வொரு மாதமும் 10 ஆயிரம் பவுண்டுகள் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.10.37 லட்சம்) வீதம் 30 ஆண்டுகளுக்கு கிடைக்கும் என்ற வகையில் மெகா பம்பர் பரிசு கிடைத்துள்ளது.

இது தொடர்பான இ-மெயில் அவருக்கு வந்துள்ளது. முதலில் அந்த மெயிலை பார்த்த போது அவர் 10 பவுண்டுகள் மட்டுமே பரிசு வந்ததாக நினைத்துள்ளார். ஆனால் தொடர்ந்து அந்த மெயிலை வாசித்த போது தான் அவருக்கு 30 ஆண்டுகளுக்கு மாதம் 10 ஆயிரம் பவுண்டுகள் வெற்றி பெற்றுள்ளது தெரியவந்துள்ளது. இந்த அதிர்ஷ்டத்தை தன்னால் நம்ப முடியவில்லை என கருதிய அவர் தனது மருமகனிடம் மெயிலை காட்டி பரிசு விழுந்ததை உறுதி செய்தார். மேலும் நேஷனல் லாட்டரியில் இருந்தும் அதிகாரபூர்வமாக அவருக்கு பரிசு விழுந்ததை உறுதிபடுத்திய டோரிஸ் ஸ்டான்பிரிட்ஜ் குடும்பத்தினருடன் கொண்டாடி மகிழ்ந்தார்.

இதுகுறித்து டோரிஸ் ஸ்டான்பிரிட்ஜ் கூறுகையில், இந்த பரிசை பற்றி நினைக்கும் போதெல்லாம் விசித்திரமாக தோன்றுகிறது. 30 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு மாதமும் அந்த பணத்தை நான் பெறுவேன். இது எனக்கு 100 வயது வரை இருப்பதற்கான காரணத்தை அளிக்கிறது. இந்த பரிசு தொகைமூலம் பழமையான எங்கள் வீட்டை புதுப்பிக்க திட்டமிட்டுள்ளோம் என்றார்.

## கைதிகளை விடுவிக்க, 6 பில்லியன் டாலர்

## பணத்தை ரிலீஸ் செய்ய ஈரானுடன் அமெரிக்கா ஒப்பந்தம்

அமெரிக்கா : செப். 13,

ஈரானில் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். அதுபோல் அமெரிக்காவும் ஈரானியர்களை சிறைபிடித்துள்ளது.

இவ்வாறு சிறை பிடிக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய அமெரிக்கா- ஈரான் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஈரானில் உள்ள ஐந்து அமெரிக்கர்கள் சிறையில் இருநது விடுதலை செய்யப்படுவார்கள். அதேபோல் ஈரான் நாட்டைச் சேர்ந்த ஐந்து பேரை அமெரிக்கா விடுதலை செய்ய இருக்கிறது.



மேலும், தென்கொரியாவில் இருந்து கத்தாருக்கு 6 பில்லியன் அமெரிக்க டாலரை மாற்றம் செய்யவும் அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் பிளிங்டன் கடந்த வாரமே கையெழுத்திட்ட நிலையில், நேற்று தான் அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஏற்கனவே அமெரிக்க துருப்புகள் மற்றம் அவற்றின் துணை நாடு துருப்புகளை ஈரான் மத்திய கிழக்கு கடற்கரை பகுதியில் அச்சுறுத்தி வரும் நிலையில், ஈரானின் பொருளாதாரத்திற்கு இது கூடுதல் உதவியாக இருக்கும் என எதிர்க்கட்சி ஜோ பைடன் அரசை விமர்சிக்கும என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தென்கொரியா-கத்தார் மத்திய வங்கி பண பரிமாற்ற அனுமதி ஐரோப்பா, மத்திய கிழக்கு, ஆசிய வங்கிகள் தொடர்பான அமெரிக்காவின் தடையை மீறியதாகாது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. மனிதாபிமான பொருட்களை கொள்முதல் செய்வதற்கு இது உதவிகரமாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளது..

## ஜி–20 மாநாடு வெற்றி இந்தியாவுக்கு அமெரிக்கா – சீனா பாராட்டு

வாஷிங்டன் : செப். 13,

ஜி-20 உச்சி மாநாடு, டெல்லியில் கடந்த செப். 9, 10-ந் தேதிகளில் நடந்தது.

இதில் அமெரிக்க அதிபர் ஜோபைடன், இங்கிலாந்து பிரதமர் ரிஷிசுனக், ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, கனடா பிரதமர் ஜஸ்டின் உள்ளிட்ட பல்வேறு நாட்டு தலைவர்கள் பங்கேற்றனர். ரஷிய அதிபர் புதின், சீனா அதிபர் ஜின்பிங் ஆகியோர் பங்கேற்கவில்லை. ஜி-20 மாநாட்டை இந்தியா வெற்றிகரமாக நடத்தி முடித்தது. இதில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதித்து கூட்டு பிரகடனம் வெளியிடப்பட்டது. இந்நிலையில் டெல்லியில் நடந்த ஜி-20 உச்சி மாநாடு வெற்றிக்கு இந்தியாவை அமெரிக்கா, சீனா பாராட்டி உள்ளது. அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர் கூறும்போது, ஜி-20 ஒரு பெரிய அமைப்பு. பல்வேறு கருத்துக்களை கொண்ட




உறுப்பினர்கள் உள்ளனர். டெல்லியில் நடந்த உச்சி மாநாடு ஒரு வெற்றி என்று நாங்கள் முற்றிலும் நம்புகிறோம். இதில் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கு மதிப்பளிக்கும் வகையில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்றார்.

சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாவோ ஜிங் கூறும்போது, ஜி-20 மாநாட்டு பிரகடனத்தை அனைத்து உறுப்பு நாடுகளும் ஏற்றுக் கொண்டது நேர்மறை தகவல்களை அனுப்புகிறது. வளரும் நாடுகளின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும், ஒருமித்த முடிவுகளை அடைய வேண்டும் என்பதிலும் சீனா எப்போதும் ஆதரவை அளித்தே வருகிறது. ஜி-20 தலைவர்களின் பிரகடனம், ஆலோசனை மூலம் எட்டப்பட்ட ஒருமித்த முடிவாகும். டெல்லி உச்சி மாநாடு, ஜி-20 சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக்காக முதன்மை மன்றமாக இருக்கிறது. இந்த உச்சி மாநாடு புவிசார் அரசியல் மற்றும் பாதுகாப்பு சிக்கல்களை தீர்ப்பதற்கான இடமில்லை. உக்ரைன் போர் விவகாரத்தில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்படவேண்டும் என்றார்.

## போர்ச்சுகலில் டேங்கர்கள் உடைந்த விபத்து வீணான 20 லட்சம் லிட்டர் ஒயின்

### சாலையில் மழை, வெள்ளம் போல பாய்ந்தோடியது கிராம மக்கள் வியப்பு

போர்ச்சுகல் : செப். 13,

தெற்கு ஐரோப்பிய நாடான போர்ச்சுகலில் டேங்கர்கள் உடைந்த விபத்தால் 20 லட்சம் லிட்டர் ஒயின் சாலையில் மழை, வெள்ளம் போல பெருக்கெடுத்து ஓடியது.

போர்ச்சுகலில் சாபோ லூரன்ஸோ டைபாரோவில் உள்ள ஒயின் தயாரிப்பாளரான லெபிரா டிஸ்டில்லரி தொழிற்சாலையில் இருந்து சுமார் 20 லட்சம் லிட்டர் ஒயின் எடுத்துச் சென்ற 2 டேங்கர்கள் உடைந்தன. 2,500 பேர் வசிக்கும் இந்த சிறிய கிராமத்தில் 2 டேங்கர்கள் உடைந்த விபத்தால் 20 லட்சம்



லிட்டர் ஒயின் அந்த பகுதி சாலைகளில் மழை, வெள்ளம் போல ஓடியது.

மலைப்பிரதேச கிராமத்தில் செயல்படும் ஆலையில் இருந்து தெருக்களில் பாய்ந்தோடிய ஒயினை பார்த்து உள்ளூர்வாசிகள் வியப்படைந்தனர். செந்நிற நதியை போன்று பாய்ந்த ஒயின் மதுவை நிறுத்தும் பணியில் அதிகாரிகள் மும்முரமாக ஈடுபட்டனர்.

## இந்திய–மத்திய கிழக்கு–ஐரோப்பிய பொருளாதார வழித்தடம் ரஷியாவுக்கே பலன் தரும்: அதிபர் புதின் பேச்சு

செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் : செப். 13,

இந்திய-மத்திய கிழக்கு-ஐரோப்பிய பொருளாதார வழித்தடம் ஆனது ரஷியாவுக்கே பலன் தரும் என அதிபர் புதின் கூறியுள்ளார்.

ரஷியாவின் துறைமுக நகரான விளாடிவோஸ்டக்கில் 8-வது கிழக்கு பொருளாதார கூட்டமைப்புக்கான நிகழ்ச்சி ஒன்று நடந்தது. இதில் அதிபர் புதின் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் பேசும்போது, புதிய பொருளாதார வழித்தடம் உருவாக்கத்திற்கான ஒப்பந்தத்தில் ஐரோப்பிய யூனியன், சவுதி அரேபியா மற்றும் இந்தியாவுடன் கடைசியாக அமெரிக்காவும் இணைந்துள்ளது. இதனால், அமெரிக்காவுக்கு பெரிய அளவில் பயன் ஏற்படும் என நான் பார்க்கவில்லை.

இதேபோன்று, எங்களுடைய வடக்கு-தெற்கு திட்டத்துடன் கூடுதலாக, இந்த வழித்தடம் வழியே கூடுதல் சரக்கு போக்குவரத்து இயக்கம் நடைபெறும். இதில் எங்களுக்கு தடை ஏற்படுத்த கூடிய விசயம் என எதனையும் நான் பார்க்கவில்லை என்று கூறியுள்ளார்.

ஆனால், இந்த திட்டம் ரஷியாவுக்கே பலன் தரும். இந்திய-மத்திய கிழக்கு-ஐரோப்பிய பொருளாதார வழித்தடம் (ஐ.எம்.இ.சி.) திட்டம், ரஷியாவின் தளவாட போக்குவரத்துக்கான வளர்ச்சிக்கு உதவும். இந்த திட்டம் பல்வேறு ஆண்டுகளாக ஆலோசனையில் இருந்து வந்தது என்று கூறியுள்ளார். அரபி கடலில் ஈரான் வழியாக இந்தியாவின் மேற்கு துறைமுகங்களுடன் ரஷியாவை இணைக்கும் வகையிலான சர்வதேச வடக்கு-தெற்கு போக்குவரத்து வழித்தடம் பற்றி புதின்



குறிப்பிட்டு உள்ளார். டெல்லியில் நடந்த ஜி-20 உச்சி மாநாட்டின் முதல் நாளில், இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான கப்பல் மற்றும் ரெயில் இணைப்புக்கான, ஒரு பெரிய வழித்தடம் விரைவில் தொடங்கப்படும் என்ற வரலாற்று ஒப்பந்தம் ஒன்று அறிவிக்கப்பட்டது. இதனை இந்தியா, அமெரிக்கா, சவுதி அரேபியா மற்றும் ஐரோப்பிய யூனியன் அறிவித்தன. இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, ஐரோப்பிய யூனியன், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் தொடர்புடைய இணைப்பு மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றின் ஒத்துழைப்புக்கான இந்த திட்ட தொடக்கம் என்பது, இதுவரை இல்லாத வகையில் முதன்முறையாக நடந்துள்ள மற்றும் வரலாற்று சிறப்பு வாய்ந்த திட்டம் ஆகும் என அதிபர் புதின் கூறியுள்ளார்

## பிரேசிலில் புயலில் வீடுகள் இடிந்து 44 பேர் பலி பாதிக்கப்பட்ட இடங்களில் துணை அதிபர் ஆய்வு

பிரேசிலியா : செப். 13,

பிரேசிலின் புயலில் வீடுகள் இடிந்து விழுந்து 44 பேர் பலியாகினர்.

பாதிக்கப்பட்ட இடங்களுக்கு துணை அதிபர் நேரில் சென்று ஆய்வு செய்தார். பிரேசிலின் தெற்கு பகுதியில் கடுமையான வெப்ப மண்டல புயல் தாக்கியது. இதனால் அங்கு கனமழை பெய்யும் என அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த புயல் கரையை கடக்கும்போது மணிக்கு 110 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசியது. இதில் கரையோர பகுதிகளில் இருந்த ஏராளமான மரங்கள் மற்றும் மின்கம்பங்கள் முறிந்து விழுந்தன. இதன் தொடர்ச்சியாக ரியோ கிராண்டே டோ சுல், கேடரினா ஆகிய மாகாணங்களில் கனமழை பெய்தது. இதில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் அர்ஜென்டினா மற்றும் உருகுவே எல்லையில் உள்ள சுமார் 60 நகரங்களில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதனையடுத்து புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதில் பல நகரங்கள் இருளில் மூழ்கின. மேலும் சாலைகளில் ஆங்காங்கே மரங்கள் முறிந்து விழுந்ததால் போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டது.

புயல் அதிகம் பாதிக்கப்பட்ட இடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்தன. இதில் சில வீடுகள் இடிந்து விழுந்து 44 பேர் உடல் நசுங்கி பலியாகினர். மேலும் 224 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது. மீட்பு படையினர் அவர்களை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். தொடர்ந்து அங்கு மீட்பு பணி நடைபெற்று



வருகிறது. அதன்படி வெள்ளம் அதிகம் பாதிக்கப்பட்ட இடங்களில் இருந்து சுமார் 14 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். இதற்கிடையே இந்தியாவில் நடைபெறும் ஜி20 மாநாட்டில் கலந்து கொண்டுள்ள பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா புயலால் உயிரிழந்த குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்தார். எனவே அந்த நாட்டின் துணை அதிபர் ஜெரால்டோ அல்க்மின் புயல் பாதித்த இடங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார். அப்போது புயலால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் தகுந்த நிவாரண உதவிகள் வழங்கப்படும் என அவர் அறிவித்தார்.




# ஜி 20 மாநாட்டுக்கு 4,100 கோடி செலவிட்டதாக தகவல் : காங்கிரஸ் கொந்தளிப்பு

# தமிழகத்தில் மணல் குவாரிகளில் தில்லுமுல்லு: அமலாக்கத்துறை சோதனை





# குடிநீருக்கே தட்டுப்பாடு : தமிழகத்திற்கு தண்ணீர் தரும் நிலையில் கர்நாடகா இல்லை


| சென்னை / புதுக்கோட்டை | 13.09.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**மு. நல்லதம்பி** , ஈழத்துத் தமிழறிஞர், புலவர் (பி.1896) (இ.1951)



**கோ. சி. மணி** , தமிழக அரசியல்வாதி (பி.1929) (இ.2016)



**கார்த்திக்** , தென்னிந்திய நடிகர் (பி.1960)



**நல்லாரி கிரண் குமார் ரெட்டி** , ஆந்திராவின் 16வது முதலமைச்சர் (பி.1960)



## இன்றைய நினைவு நாள்

**கு. சேசாத்ரி ஐயர்** , இந்திய வழக்கறிஞர், மைசூர் திவான் (பி.1845) (இ.1901)



**ஆர். சூடாமணி** , தமிழக எழுத்தாளர் (பி.1931) (இ.2010)



**ரங்கநாத் மிஸ்ரா** , இந்தியாவின் 21-வது தலைமை நீதிபதி (பி.1926) (இ.2012)

